62

Registered. No. M. 1351

உ

மலர் 1 இதழ் 7

Jnanodayam

# ஞானோதயம்

நன்மைக்குரிய நாகரீக ஞானத்தை நல்கும்
ஓர் நற்றமிழ்ப் பத்திரிகை.

(மாதந்தோறும் வெளிவரும்)

புகழ்படவாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவதெவன்.—திருக்குறள்.

காளயுக்தி௵ ஐப்பசி௴
1918-ம௵ அக்டோபர்௴

பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் ... ... ... ... | 193 |
| 2. | இராஜயோகம் ... ... ... ... | 194 |
| 3. | நாடார்களும் கான்பரன்சும் ... | 166 |
| 4. | நாடார்கள் முற்கால தற்கால நிலைமை ... | 199 |
| 5. | இலங்கை வர்த்தகமும் இந்திய நாடார்களும் | 207 |
| 6. | கடம்பூர் ... ... ... ... ... | 208 |
| 7. | சுகாதாரம் ... ... ... ... ... | 209 |
| 8. | ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸதேவர் திருவாய்மொழி | 212 |
| 9. | நமது நாடார்குல நண்பர்களுக்கோர் விஞ்ஞாபனம் | 219 |
| 10. | பொதுவிஷயங்கள் ... ... ... ... | 221 |
| 11. | நமது சந்தாநேயர்களுக்கோர் விஞ்ஞாபனம் | 222 |
| 12. | யுத்தக்குறிப்புகள் ... ... ... ... | 222 |
| 13. | நாவல். ... ... ... ... ... | 223 |


பத்திராதிபர் :—சிவ. பெ. இராமலிங்க நாடார்.

தூத்துக்குடி.

1918

JL
R6ஹ2k, M18G9
M18·1·7
210790.

# ஞானோதயம்.

இஃது கல்வி, ஞானம், பக்தி, நாகரீகம், பாஷாபிவிருத்தி, வியாபாரம், கைத்தொழில், விவசாயம், வைத்தியமாகிய பலவகைச் சாஸ்திர ஆராய்ச்சி, ஆசாரச் சீர்திருத்தம், பொது விஷயங்கள், பெண்கள் மாணவர்களுக் குரிய விசேஷ விஷயங்கள், நாவல்கள், முதலிய பல அரிய விஷயங்கள் அணிந்து வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இவை முதலாகிய பல விஷயங்கள் இதில் தொடர்ச்சியாய்ப் பிரசுரிக்கப் பெறுமாதலால் நேயர்கள் சென்ற சித்திரை மாதத்திலிருந்தே சந்தா தாரராய்ச் சேர்ந்து பத்திரிகையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு [illegible] சந்தாதாரர்கள் தங்கள் [illegible] முழுவிலாசங்களைத் தெளிவாய் எழுதியனுப்ப வேண்டும். [illegible] கிரயமாயிருந்தால், [illegible] பாலாபிஷேகச் சேர்ந்ததென்ற விபரத்தையும் குறிப்பிட்டெழுதியனுப்ப வேண்டும்.

### விஷயதானம் செய்யும் விற்பன்னர்களுக்கு வேண்டுகை.

விஷயதானஞ் செய்வோர்கள், ஜாதி மத தூஷணை சாராது பத்திரிகையின் மேற்கூறிய நோக்கங்களை அநுசரிக்க விஷயங்களைத் தெளிவான தமிழ் நடையில் எழுதியனுப்புமாறு வேண்டுகிறோம்.

### சந்தா விபரம்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| இந்தியா பர்மா சிலோன் ஆகிய இடங்களுக்குத் தபாற் கூலி யுட்பட ஒரு வருஷத்திற்கு ... ... | 2 | 0 | 0 |
| பினாங்கு சிங்கப்பூர் தென் ஆபிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு தபாற்கூலி யுட்பட ஒரு வருஷத்திற்கு ... | 2 | 8 | 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 | 4 | 0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்தகாலச் சந்தா கிடையாது.

### விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ... ... | ரூ. | 4 | 0 | 0 |
| அரைப்பக்கத்திற்கு ௸ ... ... | ரூ. | 2 | 0 | 0 |
| கால்பக்கத்திற்கு ௸ ... ... | ரூ. | 1 | 0 | 0 |

எப்பொழுதும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

சி. வை. பெ. இராமலிங்க நாட்டார்,
ஞானோதயம் ஆபிஸ்,
காரைக்குடி.

கடவுள் துணை.

# ஞானோதயம்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"—திருக்குறள்.

வால். 1 } காளயுக்தி௵ அற்பிசி௴ 1918-ம்௵ அக்டோபர்௴ { இதழ் 7

## கடவுள் வணக்கம்.

தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ்
சேர்ந்துவளர் சித்தாகியச்
சித்தெல்லாஞ் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்திரமாய்த்
திரமாகி நானாவிதப்
பொருளாகி யப்பொருளை யறிபொறியு மாகிமை
பலனுமா யைம்பூதமாய்ப்
புறமுமா யகமுமாய்த் தூரஞ்சமீபமாய்ப்
போக்கொடு வரத்துமாகி
இருளாகி யொளியாகி நன்மை தீமையுமாகி
யின்றாகி நாளையாகி
என்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவைக்கு
மிவையல்ல வாயநின்னை
அருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவ
ரறிவதற் கெளிதாகுமோ
அண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

ஆறுமுகங்கொண்ட [illegible]
மாறுமுகங்கொண்ட தல்லாரிலிறக்க முகம்பெறு [illegible]
வீறுமுகங்கொண்ட கைவேலின் வீரம் விளங்கவென்னோச்
சீறுமுகங்கொண்ட வத்தன்பமோடச் செலுத்துகவே

# ஞானோதயம்.

## இராஜயோகம்.

இந்தயோகம் சாதிப்பதற்கு இயமம், நியமம், ஆசனம் பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் சமாதி என்னும் எட்டுவிதப் படிகளுண்டு.

(1) இயமமாவது:—உயிர்வதை செய்யாமை, களவு செய்யாமை பொய் சொல்லாமை, இச்சை யில்லாமை, பிரதிப் பிரயோஜனம் விரும்பாமை முதலிய சன்மார்க்கத்தில் நிற்றலாம்.

(2) நியமமாவது:—தேகசுத்தி செய்து ஆசாரமாயிருத்தல். கெடுதி செய்தோருக்குங் கேடு நினையாமை, தேகாபிமானம் விடுத்தல், சகல கர்மங்களையும் ஈசுவரார்ப்பணஞ் செய்தல் முதலியதுகளை அப்பியாசஞ் செய்தலாம்.

(3) ஆசன வகைகளாவது:—சுவத்திகம் கோமுகம், வீரம், சிங்கம் பத்திரம், மயூரம், சித்து, பத்மம், சுகம்' என்னும் ஒன்பது விதங்களாம்.

மேற்சொல்லிய ஆசன வகைகளில் யோகிகள் முக்கியமாய் அனுஷ்டிக்கின்றவை சித்தாசனம் பத்மாசனமென்னும் இரண்டேயாம். இவ்வாசனம் நிர்ணயமில்லாவிடில் வியாதி அனுசரிக்கும். ஆகையால் மேற்சொல்லிய ஆசனங்களில் யேதாவதொன்று அவசியம் வேண்டும்.

சித்தாசனமாவது:—இடது குதிக்காலை உள்ளடக்கி வலது குதிக்காலை எதிரில் வைத்து உட்கார்ந்து புருவமையத்தில் நாட்டம் வைத்திருக்கலாம்.

பத்மாசன மாவது:—இடதுபாதத்தை வலது துடையின் பேரிலும் வலதுபாகத்தை இடதுதுடையின் பேரிலும் வைத்து உட்கார்ந்து வலக்கையால் வலது பெருவிரலையும் இடக்கையால் இடது பெருவிரலையும் முதுகின்பேரில் கைமாற்றிப் பிடித்துக்கொண்டு, முகவாய்க்கட்டையை மார்பின் மேலூன்றி நாசி நுனியில் நாட்டம் வைத்திருத்தலாம். இவ்வாசனங்களிலிருந்து கொண்டு மூன்று நாளிகை பரியந்தம் அசைவற நிற்க அப்பியாசித்தபின்னர் பிராணாயாமம் செய்யத் தொடங்க வேண்டும்.

பிராணாயாமம் செய்யத்துணிந்த யோகி மானத விரதம் செய்யாமல் ஜயமடைய மாட்டான்.

மானத விரதமாவது:—அதிபக்ஷணம் செய்யாமல், அதி நித்திரை கொள்ளாமல், பிரபஞ்சாதி விஷயங்களில் இச்சையில்லாமல் ஏகாந்த சித்த



னாய் முத்தியை விரும்பி ஈசுவரத்தியானஞ் செய்தலாம். யோகிக்கு நித்திரையை முழுதும் விடுதலும், அமித போஜனமும் குறைவான போஜனமுங் கூடாவாம்.

(4) பிராணயாமம் உத்தமம், மத்திமம், அதமமென மூன்று வகைப்படும்.

### உத்தமப் பிராணயாமம்.

(1) சந்திரனால் (இடைகலை அல்லது இடது மூக்கின் துவாரம்) 6 விநாடி பூரித்து (உள்ளுக்கிழுத்து) 64 விநாடி கும்பித்து (உள்ளுக்கிழுத்த வாயுவை உள்ளேயே நிறுத்தி) சூரியனால் (பிங்கலை அல்லது வலது மூக்கின் துவாரம்) 6 விநாடி ரேசித்தலாம் (உள்ளிருக்கும் வாயுவை வெளியில் விடுதலாம்.

(2) சூரியனால் 6 விநாடி பூரித்து 64 விநாடி கும்பித்து சூரியனால் 6 விநாடி ரேசித்தலாம்.

(3) சந்திரனால் 6 விநாடி பூரித்து 128 விநாடி கும்பித்துச் சூரியனால் 6 விநாடி ரேசித்தலாம்.

### மத்திமப்பிராணயாமம்.

(1) சந்திரனால் 12 விநாடி பூரித்து 128 விநாடி கும்பித்துச் சூரியனால் 12 விநாடி ரேசித்தலாம்.

(2) சூரியனால் 12 விநாடி பூரித்து 256 விநாடி கும்பித்துச் சூரியனால் 12 விநாடி ரேசித்தலாம்.

(3) சந்திரனால் 12 விநாடி பூரித்து 256 விநாடி கும்பித்துச் சூரியனால் 12 விநாடி ரேசித்தலாம்.

### அதமப் பிராணயாமம்.

(1) சந்திரனால் 12 விநாடி பூரித்து 384 விநாடி கும்பித்துச் சூரியனால் 12 விநாடி ரேசித்தலாம்.

(2) சூரியனால் 12 விநாடி பூரித்து 512 விநாடி கும்பித்துச் சூரியனால் 12 விநாடி ரேசித்தலாம்

(3) சந்திரனால் 12 விநாடி பூரித்து 512 விநாடி கும்பித்துச் சூரியனால் 12 விநாடி ரேசித்தலாம்.

இந்த அப்பியாசத்தை பிரதிதினமும் காலை, மத்தியானம் மாலைகளில் தவறாமல் பழகிவரவேண்டும். இதனாலடையும் பலன்கள் பலவுள.

(5) பிரத்தியாகார மென்பது திரும்ப (தன்னிடத்து) அடக்குவதாம். அதாவது 30 நிமிஷம் சுவாசபந்தனஞ்செய்ய வல்லவனான மாத்திரத்தில் ஐம்புலன்களுஞ் செயலற்று மனது சலன மின்றி நிற்கப்பெற்றலாம்.

2/1790



(6) தாரணையாவது:—சுவாச பந்தனஞ்செய்து தேகத்தை அசை [illegible]து எண்ணங்களைச் சுருக்கி நிராசையிற் பயின்று மனதை விஷயங்களில் பற்றச் செல்லவொட்டாமல் தடுத்து லயப்படுத்துவதாம். யோகி தினந்தோறும் செய்யும் அப்பியாசங்களினால் இரண்டு நாளிகை நேரம் சுவாச பந்தனஞ் செய்ய வல்லவனாகில் அந்த யோகி தாரணை செய்து முடித்தவனெனப்படும். அப்பொழுது சற்றும் பற்றில்லாமல் மனமிறந்து சுபாவ நிலையை அடைவன்

(7) தியானமாவது:—இந்திரியங்களின் சலனத்தைக் கெடுத்து மனோலயப்படுத்தி நிர்க்குணம் வகித்து 3 நாழிகை பரியந்தம் சுவாசத்தைப் பந்தித்து நாடிகள்ஸ்தம்பிக்க அசைவறவிருந்து ஆத்ம தரிசனஞ்செய்தலாம்.

(8) சமாதியாவது:—சுவாச பந்தனஞ் செய்து வெய்யில், காற்று, மழை, தீ, குத்து, வெட்டு, முதலியவைகளாலுண்டாகும் சரீர வாதனைகளின் உணர்வற்று ஸ்தம்பமாய் அசைவற நிருவிகற்பத்தில் பிரம்ம சொரூபத்திற்கலந்து நீடூழிகாலம் நின்றுவிடுதல். இதைச் செய்துமுடித்த யோகிக்கு சுகாசுகம், பயம், கோபம், கன்யாகன்யம் முதலிய அபிமானங்களில்லையாம். கலலோக நவரத்தினங்களையும் ஒரு பொருளாக வெண்ணிமதியான். பிரியாப் பிரியம் விரோதம், நேசம், என்னும் இவைகளில் சம்பந்தப்படாமல் சுவாசம் ஓடுகிற வரையில் மனதை விஷயங்களில் பற்ற விடுத்து சுவாசபந்தனஞ் செய்தவுடன் மனதை லயப்படுத்தியும் துக்கமுழுதுந் தீர்ந்து நிற்பன்.

சாஸ்திரவிதிப்படி 30நாளிகை சுவாசபந்தனஞ் செய்திருத்தல் சமாதி எனப்படும். யோகி இச்சமாதியிலிருக்கையில், சர்ப்பந்தீண்டினாலும், ஆயுதங்களினால் வெட்டிக்குத்தினாலும், தீயிட்டுக் கொழுத்தினாலும், சரீரத்திற்கு வாதையுங் கெடுதியுமுண்டாகாமலும் ஜலத்தில்எத்தனைகாலமுழுகிக் கிடந்தாலும் மரியாமலும் வெய்யிலில் எத்தனைகாலமிருந்தாலும் சரீரமுலராமலும், ஆகாரமுதலியவை வேண்டுவதில்லாமலும், பாவபுண்ணிய மணுகா திருப்பன்-மேற்கூறிய சமாதி முடித்தவர்கள் தத்துவாதிகளின் உபாதியை யொழித்து எழுவகத்துள்ளாரும் தம்மையடைய முதற் காரணமாகிய தவத் திற்றேர்ந்து பிரமமாவார்கள்.

---

## நாடார்களும் கான்பரென்சும்.

சகோதரர்காள் தற்போது நாம் பொருளிலும் கல்வியிலும் சற்று முன்னடைந்திருப்பது யாவரும் மறிந்ததேயாம் இவை நாம் இடைவிடாது முயற்சித்தால் நம் பூர்வீக (அதாவது ராஜ) லக்ஷணங்களுடன் விளங்குவோமென்பதற்கோர் அறிகுறியாகுமென்பது வெளிப்படையே.



நாம் நமது ஜனசமூக முன்னேற்றத்திற்காக பாடுபட்டு அரும்பிரயாசையெடுத்துக் கொண்டவைகளில் கான்பரென்சும் ஒன்றேயாகும் அதை ஏற்படுத்தி முதலாவது பிரையாற்றிலும் இரண்டாவது சென்னை பட்டணத்திலும் கூடி மூன்றாவதும் சென்னையிலேயே கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஆனால் எதிர்பாராதவண்ணம் அக்கான்பரென்ஸ் என்னும் முக்கிய கருவிகளான் நாடார் மகாஜனசங்க வைஸ்பிரசிடெண்ட் ஸ்ரீமான் ராவ்பகதூர் T. இரத்தினசாமி நாடார் லான்ட்லார்டு அவர்களும் அட்வோகேட் ஜெனரல் ஜோசப் சத்திய நாடார் M. A. B. L. அவர்களும் இவ்வுலகை நீத்தனர். ஆகையால் மூன்றாவது கான்பரென்ஸ் மதுரையில் நடவாது எழுவருடம் வரை சிதறிப்போய் விட்டது இதனிடையில் விஜயவிகடன் பத்திராதிபர் ஸ்ரீமான் K. S. கதிர்வேல் நாடாரவர்களும் திராவிடாபிமானி பத்திராதிபர் ஸ்ரீமான் ஜான் நாடார் அவர்களும் இன்னும் சில அபிமானிகளும் பத்திரிக்கை மூலமாய் கான்பரென்ஸ் கூட்ட வேண்டுமென்று தூண்டிக்கொண்டேயிருந்தனர் இவர்களின் நன்முயற்சியாலும் இன்னும் சில குலாபிமானிகளின் நன்முயற்சியாலும் எம்பெருமான் திருக்கருணையாலும் மூன்றாவது கான்பரென்ஸ் மதுரையில் கூட்டப்பெற்றது. இவற்றிடையில் திராவிடாபிமானிப் பத்திராதிபர் ஸ்ரீமான் ஜான் நாடாரவர்களும் விஜயவிகடன் பத்திராதிபர் ஸ்ரீமான் K. S. கதிர்வேல் நாடார் அவர்களும் இவ்வுலகை நீத்தனர். இவை அனைவரையும் வருந்தச்செய்தன ஆயினும் அவர்களின் முயற்சியினாலேயே கூட்டப்பெற்ற மூன்றாவது கான்பரென்ஸ் யாதொரு விக்கினமுமின்றி மங்களகரமாய் நிறைவேறினமை அனைவராலும் பெரிதும் போற்றத் தக்கதே நான்காவது கான்பரென்சும் வெகு விமரிசையாய் மதுரையிலேயே கூட்டப்பெற்றது. அதிக சிலாக்கியமானதே.

சகோதரர்களே! குலாபிமானிகளே! கவனியுங்கள். இதுவரை கான்பரென்ஸ் கூட்டியதும் அங்கு தீர்மானிக்கப்பட்டதும் முக்கியமானவைகளும் ஒழுங்கானவைகளுமே யாகும் ஆனால் அத்தீர்மானத்தின்படி நடந்தவைகளோ இல்லையென்றே கூறவேண்டும் நண்பர்களே! கான்பரென்ஸ் கூட்டிச்செய்யும்தீர்மானம் அதை அநுஷ்டானத்திற்கு கொண்டுவாராவிடில் பிரயோசன மற்றனவேயாம்.அதை அநுஷ்டித்தால் பெரும் பயன் தரும்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய" அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்" என்றதால் செய்கையில்
"ஊழையும் முப்பக்கம் காண்ப' ருலைவின்றி
தாழாது ஞற்றுபவர் என்று

கூறிய நாயனார் வாக்கை கடைப்பிடித்து உலையா முயற்சி செய்யுங்கள் அப்போது நற்பயனடைந்து உலகத்திற்கோர் திலகமாகவிளங்குவீர்கள் என்பது

சத்தியம் அங்ஙனமின்றி நாம்சங்கத்தில் தீர்மானித்த விஷயங்களை மறந்துவிட்டு சுயஆட்சி சங்கத்துடனும் திராவிட சங்கத்துடனும் கலக்கவேண்டுமென்று நம் சகோதரரில் சிலர் எண்ணுவதை அறிந்து மிக்க விசனித்து அவர்களுக்கு இவ்விடத்தில் ஓர் வார்த்தைகூற அவா மிகுந்துளோம் அதாவது சுயஆட்சி சங்கம் திராவிட சங்கங்களுடன் உறவாடிக் கலக்க - எண்ணங்கொள்ளும் பிரிய சகோதரர்களே கவனியுங்கள் நாம் இந்த உலகத்தினில் எந்த இடங்களிலும் உள்ள எந்தஜாதிகளிலும் எந்தவிஷயத்திலும் தாழ்ந்தவர்களல்லவென்பதை எப்பொழுதும் மறவாதீர்கள் இதை சாஸ்திரங்களிலும் அநுபவத்திலும் பார்க்க காணலாம் (ஏதோகாலவசத்தால் இப்பொழுது இந்நிலைமையிலிருக்கிறோம்) நாம் உன்னத நிலைமையிலிருந்து வடுக அரசர்கள் செய்த கெட்டசெய்கைகளின் பயனால் சிறிது கஷ்டப்பட நேர்ந்தது. அத்தருணத்தில் மற்றயெல்லா ஜாதியினரும் ஒன்றுசேர்ந்து நம்மை மிகு வருத்தப்படுத்தி தாழ்த்தப் பார்த்தார்கள். நமது கெட்டகாலத்தின் பயனாலும் மற்ற ஜாதியாரின் பொறாமையினாலும் படிக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படலானோம் அதுமுதல் இதுவரை. நமக்கு உதவிசெய்த கக்ஷியார் ஒருவருமில்லை காருண்யமே உருவமான பிரிட்டிஷ் ஆட்சியின் கருணையால் நாம் இப்பொழுதுள்ள நிலைமையை அடைந்தோம் (இப்பொழுது சுய ஆட்சி சங்கத்தார் திராவிட சங்கத்தார் என்னும்) இரு கக்ஷியினரும் ஏதோதோ உதவி செய்வதாகவும் தங்கள் சங்கத்தில் சேரவேண்டுமென்றும் ஆசைவார்த்தை சொல்லி ஏமாற்றப்பார்க்கிறார்கள் இவர்களின் வார்த்தைகளை நம்பி மோசம் போகாதீர்கள் இவ்விரண்டு கக்ஷியாராலும் நமக்கு நன்மை ஏற்படாது இன்னும் உங்களுக்கு சொல்லல் அவசியமில்லையென இத்துடன் நிறுத்துகிறேன் சகோதரர்களே உலகத்தில் மோசம் அதிகமாய்விட்டது (இவர்கள் நமக்கு நன்மையாய் நன்மை செய்பவராயின் இதுவரை எங்கு போயிருந்தனர் ஏதோ பெரியமோசம் நம்பாதீர்கள்) ஆசைவார்த்தையை நம்பி மோசம் போகாது உஷாராக இருங்கள் தன்கையே தனக்குதவி பிறருதவி பயன்படா எந்த விஷயத்தையும் யோசித்து செய்யுங்கள் நுண்ணிய கருமமும் எண்ணித்துணி எண்ணித்துணிவது கருமம் துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு எனக்கூறிய ஆன்றோர் உண்மைகளை அறியுங்கள் ராஜவிசுவாசமாயிருங்கள எம்பெருமான் உங்களுக்கு நல்லருள் புரிவார் சுபம் சுபம் சுபம்:

குலசேகரப்பாண்டியன்,
ஆண்டிபட்டி.

---



## நாடார்கள் முற்கால தற்கால நிலைமை.

(187-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஆகையால் தலைவர்களாயுள்ளவர்கள், தன்னலம் முற்றிலும் வெறுத்து தங்களுடைய பிடிவாதத்தையும் போக்கி பொதுஜன நன்மையைக் கருதும்படி கோருகிறோம். அன்றி புலி பசுத்தோலைப் போர்த்த மாதிரி பொது ஜனத்தின் பேரால் தன்னலங் கருதுந் தலைவர்களை ஜனங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்பதை தலைவர்களறிய வேண்டுகிறோம் இதற்கு தாரணமாக ஜப்பானைப் பற்றிக் கொஞ்சங் கூறுவோம்

ஜப்பான் தேசமானது சுமார் 50 வருஷங்களுக்கு முன்பு வெகு தரித்திர திசையடைந்து அன்னியர்கள் கைக்குள்ளகப்பட்டுப் போகுந்தருவாய்க்கு வரவும் அங்கே அதைச்சீர்திருத்த வேண்டுமென்று முயற்சிசெய்த பலதலைவர்களில் அட்மிரல் டோகோவும் திருத்தக்காரரில் ஒருவராவர்; இவர் தேசத்திற்கு பிரதானமானது கடற்படையேயாம் என்று அதன் பேரில் கண்ணுங்கருத்துமாயிருந்து திருத்தினார், மார்க்விஸ்யமகாட்டா பாரன் ஜெனரல்கொடாமா. முதலிய தலைவர்கள் தரைப்படையாலன்றி தேசம் காக்கப்படாதென்று நினைத்து அதை விருத்திசெய்தார்கள். மற்றொருவர் கைத்தொழில்தான் முக்கியமானதென்றும் பின்னொருவர், விவசாயந்தான் பிரதானமென்றும், அதனை விருத்திசெய்தார்கள். எல்லாவகைக்கும் ஆணும் பெண்ணுங் கற்குங்கல்வித்திறமையாக வேண்டுமென்று ஒருவர் கல்வியிலாக்கா வைத்திருத்தியமைத்தார், பாரன்ஷி புஸாவர் என்ற பேரபிமானியோ வென்றால் துரைத்தனம் எவ்வாறு சீர்திருத்தம் பெற்றிருப்பினும் செல்வப்பெருக்கில்லையாயின் அபிவிர்த்திக்குத் துக்கம் நேரிடக்கூடும் செல்வமும் வர்த்தகமும் தேசசுபிக்ஷத்துக்கு இன்றியமையாதவென்பதை ஆதிமுதல் உணர்ந்தவராய் தாம் ஏற்றிருந்த அரசினர் உதவி மந்திரி ஸ்தானத்தையும் ஒழித்து வர்த்தகக் களத்திற் புகுந்து ஜப்பானில் தனவிருத்தியை உயர்த்திவைத்தார். இப்படி தேசத்திற்கு பல தலைவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்குரியவைகளை முக்கியமென்று கருதி யுழைத்தவர்களேயானாலும் மொத்தத்தில் எல்லாச் சாதனங்களும் வேண்டியதுதானென்பதை யுண

ராமல் ஒருவருடைய முயற்சிக் கொருவர் விரோதங்காட்டியதே கிடையாது. அப்படித்தங்கள் தங்கள் எடுத்தகாரியமே தேசத்திற்கு அனுகூலமானவை யென்று ஒவ்வொருவரும் மனப்பால் குடிப்பார் களானால் தங்களுடைய உத்தேசம் பலித்திருக்க மாட்டாதன்றோ? அப்படிக்கெல்லாம் அபிப்பிராய பேதமில்லாமல் கடற்படைத்தலைவர் எவ்வளவு தூரம் அதை முக்கியமென்று நினைத்தாலும் தரைப்படையினுடைய உதவிதனக்கு அவசியம் வேணுமென்றே நினைத்தார். இப்படியே பலதலைவர்களும் ஒருவருக்கொருவர் கூட்டுறவு காட்டியதால் தற்சமயம் கீழ்தேசத்து இங்கிலாந்து என்று பெரும்புகழ் படைத்து ஒப்பற்ற உன்னத பதவியடைந்திருப்பதைக் கண்டெல்லா வல்லரசுகளும் அதனோடு சிநேகமாயிருக்க ஆசைப்படுகின்றது.

நாடார்குல நண்பர்களே இதனால் தெரிந்துகொள்ள வேண்டியதென்ன? ஜப்பான் தலைவர்கள் பலரும் பலகாரியத்தில் முயன்று பிரயாணத்தை ஆரம்பித்தபோதிலும் அவர்களெல்லோரும் முடிவில், தேசநன்மைக்கு என்ற ஒரே ஸ்தலத்திற்கேவந்து சேருகிறார்கள். அதுபோல் நம் நாடார்குல நன்மைக்காகவே பலரும் பலகாரியங்களில் முயற்சித்தபோதிலும் முடிவில் ஒருபாதைக்கே வந்து கூடுகிறவர்களாயிருக்கவேணுமென்று விரும்புகின்றோம். அன்றியும் வீண் விபகாரங்களை ஒழிக்கவேண்டும். அபிப்பிராய பேதங்கள் ஆராய்ச்சிக் குறைவாலும், பிடிவாதக் குணத்தாலும், ஏற்படுகிறதேயன்றி வேறல்ல. பிடிவாதத்தைத் தொலைத்து நீங்களும் காரியத்தன்மை எப்படி என்பதை தீர்க்காலோசனை செய்து சுமுகத்தோடு நோக்குவோமானால் நம்முடைய புத்தியை செவ்வனே விளக்கிக்காட்டும். அதாவது, உதாரணமாக அருப்புக்கோட்டையிலிருந்து மதுரைக்கு ஒரு காரியமாகப் போகவேண்டியதிருக்கிறது. மதுரைக்குப்போய்ச் சேரவேண்டிய விஷயமாய் இருவருக்குள் அபிப்பிராய பேதமுண்டாகிறது. அதெப்படியென்றால் பின்வருமாறு

## விவாதம்.

ஆ. என்பவர், அருப்புக்கோட்டையிலிருந்து மதுரைக்கு நடந்து தான் போகவேணும்.



என்பவர் விருதுபட்டி போய் ரெயிலேறிச்சுற்றித்தான் போகணும்.

நேரேநடந்து போனால் பகல் 3 [illegible] லாமே?

மோட்டார் ஏறி ரெயிலேறி போனாலும் 3 மணிக்கு போய் டலாமே.

ஆ. ரெயிலேறிச் சென்றால் பணச்செலவாகுமே.

பா. நடந்துபோனால் தேகங் கெட்டுப்போகுமே

ஆ. தேகத் திடமிருக்கிறது அதிலும் நடப்பதில் நன்மையுண்டு.

பா. பணக்கஷ்டமில்லை சுகாதாரத்தோடு ரெயில்வழியே போகவேணும்.

ஆ. ரெயில் ஒருசமயம் தாமதித்துவந்தால் நேரமாகிவிடும்.

பா. வழியில் மழைபெய்து ஆற்றில் பிரவாகம் வந்தாலதுவுந் தடைதானே.

ஆ. ரெயிலில் சில சமயம் அபாயமுண்டாகிறதே.

பா. வழியாலும் சில சமயம் திருடர் பயமுண்டாகிறதே.

ஆ. நமக்கு பலமிருக்கும்போது திருடர்பயம் பாதிக்காது.

பா. நமக்கு தனமும் தந்திரமுமிருக்கும்போது ரெயிலபாயம் பாதிக்காது.

இவ்விதமாக ஒரு பணக்காரனும் பெலக்காரனும் தங்களுடைய பணத்தையும் பெலத்தையும் உத்தேசித்து மதுரைபோய்ச் சேரவேண்டிய காரியத்தில் வீண் விவாதம் பண்ணிக்கொண்டே குறித்த இடமாகிய மதுரை போய்ச்சேராமலே நின்றுவிட்டார்கள். இவ்விருவர்களிலொருவராவது எப்படியும் மதுரை போய் சேர்ந்தால் சரியென்று தங்கள் பிடிவாதத்தை விட்டாலென்னவோ? கனதனவான்களே! தற்சமயம் நமக்குப் பணமிருக்கிறது. பெலமிருக்கிறது.' மனமிருக்கிறது திரண்ட ஜனமிருக்கிறது, சகல வைபவங்களுமிருக்கிறது இதற்கிடையில் சுயநலக்கருதி பிடிவாதஞ்செய்யுமொரு திரைமறைவுமிருக்கிறது. அதனுள்ளே நம் பூர்வப் பெருமைகளையெல்லாம் மறைத்துவைக்கப் பட்டிருக்கிறது அத் திரையை நல்லறிவென்னும் வாளால் சேதித்துவிட்டோமானால் நமக்குள்ளடங்கிக் கிடக்கும் பெரிய சக்தி வெளிப்பட்டு உலகத்தார் மதிக்கத்தக்க வுன்னத பதவிக்கு உடனே வந்துவிடு

வோம். இதோடு நமது தற்கால நிலைமையொருவிதமாகச் சொல்லி முடித்தோம்.

இன்னும் நம்முடைய தற்கால வாழ்விற்குரிய சாதகங்கள் எவை. நாம் அதற்காக தற்காலம் கைக்கொள்ள வேண்டியவைகள் எவையென்பதைப்பற்றி சற்று ஆலோசிப்போம். நமது பிற்கால வாழ்விற்கு தற்காலம் அவசியம் வேண்டியதென்னவென்று ஆலோசிப்பமானால் அவசியம் வேண்டியது கல்வியொன்றொன்றே புலப்படும் கல்வியில்லாமல் அநேகம் பெற்ற பல தேசங்களும் பல ஜாதிகளும் க்ஷீண திசையடைந்து வந்திருந்தும் பின் கல்வியின் பெருமையினால் மகாஉன்னதப் பதவியடைந்திருக்கின்றன பொதுவாக இவ்வுலகமே கல்வியின் அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம் நீசனென்று சொல்லக்கூடிய ஒருவன் ராஜபாஷை கற்றிருப்பானானால் அவனைத் தேசமெல்லாம் போற்றுகின்றதன்றோ நாம் தேச பாஷையிலும் ராஜபாஷையிலும் முன்னேறி நல்ல பக்குவத்திற்கு வந்துவிட்டோமானால் நமக்கு எந்தக் காலத்திலும் எந்தவிதத்திலும் கஷ்டங்களேற்படவே மாட்டாது கலி 5001ல் நிகழ்ந்த காலத்தின் போது நாமிப்போது கல்வியிலிருக்கிற நிலைமையிலாவது இருந்திருப்போமானாலும் நமக்கு எவ்வளவோ அனுகூலமாயிருந்திருக்கும் சாதாரண கல்வி கற்ற ஒரு யூனியன் பில்கலெக்டரும் கூட சில இடங்களில் நாட்டு எவ்வளவு தூரம் வரம்பு கடந்து அதிகாரத்தைச் செலுத்துகிறான். நாம் நன்றாய்க் கற்றறிந்து ராஜீய விஷயங்களை நன்கறிந்திருப்போமானால் யாரும் அவ்வவர்கள் உத்தியோகக் கோரணையை மீறி அதிகாரம் செய்யமாட்டார்கள் ஆகையால் நம்முடைய ஜாதியில் ஆண் 14வயது வரையும் கட்டாயம் படித்துத் தீரவேணும். அப்படிப் படிக்காத ஆடவர்களுக்கு நம் ஜாதியில் பெண்கொடுக்கலாகாது நம்மிடம் வேலையிலமர்த்திக் கொள்ளவுங்கூடாது. பெண்களும் 12வயது வரை கட்டாயம் படிக்கவேணுமென்று நமது ஜாதிச்சட்டமாய்ச் செய்து கொள்ளவேண்டும். நம்பொது ஜனநிதிகளையின்னும் பலப்படுத்திக் கிராமங்கள் தோறும் பிரைமெரி பாடசாலைகளைவைக்கவேண்டும். பெரிய பட்டணங்களில் உயர்தரக் கலாசாலைகளை



அமைக்கவேண்டும். பி. ஏ. பி. எல். முதலாய் மேல்வகுப்புக்குப் போகிற புத்திசாலிகளுக்கு உதவி செய்யவும் வேண்டும். நம்முடைய ஜனங்கள் மற்றவர்களோடு பத்துக்கு ஒருவராவது உத்தியோகங்களில் அமரவேண்டும் அன்னிபெஸண்டம்மையவர்கள் இந்தியர்களைப்பார்த்து நீங்கள் சாக்கடை வேலை முதல் தாங்களே சரியாய்ச் செய்யக் கற்றுக்கொள்வீர்களானால் சுயஆட்சிப் பெருமையை ஏற்கும் சக்தியுடையவர்களாவீர்களென்று ஒரு சமயம் சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் நம்முடைய ஜாதியர்கள் மேன்மையடையவேண்டுமானால் கல்விகற்று யூனியன் மேஸ்திரி வேலை முதல் கவர்னர் செக்ரடேரி வேலை வரையுமுள்ள உத்தியோகங்களிலெல்லாம் கலந்திருக்கவேண்டும். தொழில் முதலியவைகளையும் அபிவிர்த்திசெய்யவேண்டும் வர்த்தக முயற்சி இப்போதிருக்கிறது போதாது இன்னும் பலமாய்ச் செய்வதோடுவர்த்தகத்தில் நம்பிக்கை அதிகமாயேற்படும்படி ஒரு வர்த்தக சங்கம் ஒன்று நமது நாடார் மகாஜன சங்கத்தைப்போல் அமைக்கவேண்டும். அதோடு ஆசாரச்சீர்திருத்தக் கான்பரன்ஸ் ஒன்று வருஷா வருஷம் நாடார் மகாஜன கான்பரன்ஸ் கூடுமிடங்களில் கூடவேண்டும் ராஜீய விஷயத்திலும் தேசியக் காரியங்களிலும் கலந்து வேலை செய்யவேண்டும். சென்னையில் ஒரு ஹாஸ்டல் கட்டவேணும் நாம் ஒதுங்கியிருப்போமானால் ஒதுக்கப்பட்டவர்களாகவே போவோம் பந்தியில் இடமில்லையென்றாலும் இலை பொத்தல் இலை பொத்தல் என்று சொல்லிக்கொண்டே நுழைந்து எத்தனை ஜாதிக்காரர்களோ அதிகதூரம் போய்விட்டார்கள். நாம் கல்வியில்லாமல் எத்தனை கோடி திரவியமுள்ளவர்களாயிருந்தாலும் சரி எத்தனை தேவாலயங்களையும் அன்னச்சத்திரங்களையும் கட்டிவைத்தாலும் சரி அது வேடிக்கையாய்ப்போனார். திரவியம் ஒருக்கால் கூடும் ஒருக்கால் குறையும் ஆலயம் அமர்த்த குடிக்கனக்காரன் வசமாகும். இதை அனுபோகத்தில் பார்த்திருக்கிறோம். கல்வி இருந்தால் எல்லாவற்றையும் [illegible] செய்யும் திறமை [illegible]. [illegible] விருப்பமாய். ஆனதுபற்றி கல்வி விஷயமாய் நாமெவ்வளவு தியாகம் செய்யவேண்டுமோ அவ்வளவு உடனே செய்து தீரவேண்டும்.

கூத்தாட்டவைத்தற்றே பெருஞ்செல்வம்
போக்குமது விழிந்தற்று.

என்று நாயனார் கூறியபடி களைக்கூத்துப் பார்க்கவந்த ஜனங்கள் கூடிக்கலைவதுபோல் நம்மிடம் வந்த செல்வம நம்மைவிட்டுப் பிரியுமுன்பாக நாம் செய்யவேண்டிய வேலைகளை தீவிரமாய்ச்செய்து முடிக்கவேண்டும். பெருக்காறொத்தது செல்வம் பெருக்காற்றிடைக் கறை யொத்ததிளமை. யிடிகறை வாழ்மரமொத்தது வாழ்நாள் ஆதலால் ஒன்றே செய்யல் வேண்டும். ஒன்றும் நன்றே செய்யல் வேண்டும். நன்றும் இன்றே செய்யல் வெண்டும். இன்னும் இன்னே செய்யவேண்டும் அன்றி நாளை நாளையென்பீராகில் நமனுடை நாளாவது மறியீர் நம்முடைய நாளாவது மறியீர் என்ற முன்னூல்மொழிகளை நன்கறிய வேண்டும்.

கல்வியை நம்மர்வகளுக்குக் கட்டாயப்படுத்தல்வேண்டுமென்றுவது உயர்தரக்கல்விக்குபகாரஞ்செய்யவேண்டுமென்றுவதுகவர்ன்மெண்டாரையாவது மற்றவர்களையாவது மிதமிஞ்சிய உதவிகோருவது சரியல்ல நம்முடையமுன்னேற்றம் நமதுகையிலிருக்கிறது 700 வருஷங்களாக நமக்குயார் உதவி செய்தார்கள் நம்முடையசக்தியினுலும் கூட்டுறவினுலுமே சமாளித்துவந்திருக்கிறேம்கவர்ன்மெண்டார் நமக்கென்று பிரத்தியேகமான சகாயம் இதுவரையுமொன்றுஞ்செய்யவில்லை ஆனுலும் நாம் உண்மையுள்ள இராஜபக்தியுடையவர்கள் என்பதைகவர்ன்மெண்டார் மதித்து வந்திருக்கிறார்கள். பொதுவாகக் காருண்ய பிரிட்டீஷ் கவர்ன்மெண்டாருடையகருணையான பார்வை இந்தியாவிற் பட்ட மாத்திரத்தில் இந்தியாவிலுள்ளயெல்லாச் சாதியார்களையும் போலநாமும் நல்லநிலைமையில்இருக்கின்றேம் அதற்காக கவர்ன்மெண்டாருக்கு எப்போதும் நன்றியுடையவர்களாய் மற்றவர்களிருப்பதைப் பார்க்கிலும் நாம் ஒருபடி முன்னிருக்கின்றேம் நம்முடைய முன்னேற்றத்துக்கு கவர்ன்மெண்டாரையாவது மற்றவர்களையாவது எவ்வளவுதூரம் எதிர்பார்க்கலாமோ அதற்கு மேற்கொண்டு பார்ப்பது கூடாத காரியம் கல்வி கற்பது நம்முடையகடமை. நல்ல உத்தியோகங் கொடுப்பது கவர்ன்மெண்டாருடையகடமை. எந்தக்காலத்திலும் துணையை நம்பி நாம்பலசாலிகளாயிருப்பதில் பின் தங்கிவி



டக்கூடாது. சமயத்திற்குநம் முடைய பலம் நமக்கு உதவிசெய்யும்

நமது பிற்கால வாழ்விற்குச் சாதகமான இன்னும் என்னவென்று யோசிப்போமானல் தற்காலம் இவ்வுலகெங்கும் நிகழ்ந்து கொண்டிருக்கும் கிளர்ச்சியில் நம்முடைய கவனத்தைச் சற்றே திருப்ப வேண்டியதிருக்கிறது. அதாவது கடவுளுடைய சோதனையால் ஐரோப்பாவில் பெரிய யுத்தம் தோன்றியவுடனே எல்லாத்தேசங்களும் விழித்துக்கொண்டது போல் இந்தியாவும் சுய ஆட்சிபெற ஆசைகொண்டு ராஜாங்கத்தாரிடம் கற்றறிந்த மேதாவிகளும் பொதுஜனப் பிரியமுடைய பெரிய தேசாபிமானிகளுங் கூடிய காங்கிரஸ் முஸ்லீம் லீக்கும் கூடிக் கேட்டுக் கொண்டார்கள். சக்கிரவர்த்தியவர்களுடைய கவர்ன்மெண்டாரும் ஆகட்டுமென்று தலையசைத்து விட்டதோடு எந்த விதமான ஆட்சி கொடுக்கலாமென்றுபெரிய யோசனை செய்துவருகின்றார்கள். இதற்கிடையில் இதுகாறும் பிராமணர்களோடு அதிகமாக நேசித்தும் காங்கிரஸில் மிக உழைத்தும் வந்த சில பேர்கள் ஒதுங்கி சுய ஆட்சி கொடுத்தாலது பிராமண ஆட்சியாய் முடியும் ஆகையாலிப்போது கொடுக்கக் கூடாதென்று வாதிக்கின்றார்கள் இப்பேச்சு நமது சென்னைராஜதானியில்தான் அதிகமாயிருக்கின்றதென்பது யெல்லோருமறிந்த விஷயம். அதாவது பிராமணரென்றும் பிராமணரல்லாதவர்களென்றும் பிரிவினையை யுண்டாக்கிவிட்டார்கள் இதில் பிராமணரல்லாதவர்கள் என்று சொல்லும் கூட்டத்தில் நல்ல தாராள நோக்கமுடையவர்களாகவும் தேசாபிமானிகளாகவும் ஒருவகுப் பார் பிரிந்து இவ்விரண்டிற்கும் இடையில் இந்தியா நன்மை தீமைக்குப் பாத்திரமாகவும் பிராமணரல்லாதவர்களுடைய நிலைமையை சுமுகத்தோடு கவனிக்கிறவர்களாகவும் இந்தியா மேன்மை பெற வேணுமானல் அதற்கு சுயஆட்சியே அடிப்படையென்று சுயஆட்சியைக் கோரி நிற்கிறார்கள் இவைகளில் பலபத்திரிகைகளும் தோன்றியிருக்கின்றன. இத்தக்கிளர்ச்சி சென்னைராஜதானியில் பிள்ளைக்கயர் கட்டாத சிறு பிள்ளைகளையுங்கூடப் பிடித்தாட்டுகின்றன ஒவ்வொருவருடைய மூலாதாரங்களும் முன்னின்று இலங்குகின்றன இதுகாறும் பஞ்சமர்களை தீண்டாச்சாதிக்காரர்களென்று ஒதுக்கி வைத்தி

ருந்தார்கள் இப்போது அவர்களை பிராமணர்களும் பிராமணரல்லாதவர்களும் சகோதரர்களே வாருங்கள் அருகிற் குந்துங்களென்று கூவுகின்றார்கள். அவர்களோ நாங்களே ஆதித் திராவிடர்கள் இப்போது ஆரியர்களிருந்த நிலைமையில் நாங்கள் அப்போதிருந்தோம் ஆரியர்கள் வந்து குடியேறியபின் எங்களுடைய அனுஷ்டானங்களை யெல்லாம் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள் ஆகவே நாங்கள் தாழ்ந்தவர்களாகிப்போனோமென்றும் ஆனால் உயர்ந்தவர்கள் நாங்கள்தானென்றும் சொல்லுகிறார்கள். இதெப்படியானாலுஞ் சரியே சுய ஆட்சி வேணும் வேண்டாம் என்ற விவாதத்தில் ஆரியர் திராவிடர் என்ற ஜாதிப்பேய்வந்து நுழைந்துகொண்டு பத்திரிகைகளெல்லாம் கலைவிரித்தாடுகின்றது. இந்தியாவெங்கும் பெரிய சப்தமுண்டாகியது இச்சப்தம் இங்கிலாந்திற் கேட்டதும் நமது இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு அவர்களை இந்தியர்களின் இரைச்சலை என்னவென்றறிந்து வாருமென்று நமது சக்கிரவர்த்திப் பெருமானும் மந்திரிமார்களும் வழியனுப்பி வைத்தார்கள். அவர்களும் இந்தியாவெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து இந்தியர்களின் வேண்டுகோளைத் தெரிந்துகொண்டு சுகமே இங்கிலாந்து போய்ச்சேர்ந்து இன்னும் ஆலோசித்துக்கொண்டிருக்கின்ற விஷயம் எல்லோரும் அறிந்ததே. அச்சந்தர்ப்பத்தில் பிராமணர்கள் காந்திமகஜரில் கையெழுத்து வாங்கியதும் பிராமணரல்லாதவர்கள் அதில் கையெழுத்துப் போடாமலிருக்கும்படி செய்த சூழ்ச்சிகளும் பார்த்தோம். அதில் நாடார் குலத்தவர்களிற் சிலர் க்ஷத்திரியராகவும் சிலர் பறுகக்ஷத்திரியராக எழுதியும் பேசியும் வந்தார்களென்பது சகலரும் அறிந்ததே. இச்சந்தர்ப்பத்தில் நாமினிச் செய்யவேண்டியதென்னவென்று நன்றாய் ஆலோசித்துத் தெளிய வேண்டியதிருக்கிறது அதைப்பற்றி எங்களுடைய அபிப்பிராயங்களைக் கீழே குறிப்பிடுவோம் இதை வாசிக்கும் பேர்களுக்கு வேறு அபிப்பிராயமுண்டானாலும் எங்களுக்குத் தெரிய எழுதுங்கள். எங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய நியாயம் தெரியுமானால் அப்படியே மாற்றிக்கொள்ளலாம். (தொடரும்.)

து. ச. முத்து நாடான், அருப்புக்கோட்டை.



## இலங்கை வர்த்தகமும் இந்திய நாடார்களும்,

க்ஷத்திரிய குலத்திலுதித்த உத்தம சீலரான நம் நாடார்குல கனவான்கள் பலர் தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுபட்டி, மதுரை, பாம்பே, கல்கத்தா, கராக்ஷி, ரங்கூன், முதலிய பிரபல்யமான வர்த்தகஸ்தானங்களிலும் துறைமுகப்பட்டினங்களிலும், மற்றும் இந்தியாவின் பல பாகங்களிலும், சிறப்பான பல வியாபாரங்களையும், ஜெயம்பெற நடத்திவருகிறார்கள். ஆனால் உலகப்பிரசித்தி பெற்ற வியாபார ஸ்தலங்களிலொன்றாகிய, குபேரபட்டணமென்றழைக்கப்படும் இலங்கையின் இராஜதானிபட்டணமாகிய கொழும்பு வியாபாரத்தை நாடார்குல கனவான்கள் கருதாதிருப்பது வருத்தமான ஓர் காரியமெனக்கூறல் மிகையாகாது. சிவகாசி, அருப்புக்கோட்டை, விருதுபட்டி, நாடார்கள் இவ்வூரில் வருஷத்தில் 3 அல்லது 4 மாதம் தங்கி களிப்பாக்கு கொள்முதல் செய்தானதும் ஊருக்குப் பிரயாணமாய் விடுகிறார்கள். இவ்வூரில் பாக்கு கொள்முதலைத்தவிர வேறொரு வியாபாரத்தையும் நம் நாடார்கள் திரும்பிப்பார்ப்பதுமில்லை.

இவ்வூரில் முக்கியமான வியாபாரம் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து இறக்குமதியாகிற அரிசியும், தூத்துக்குடி, விருதுபட்டி, மதுரை முதலிய இடங்களிலிருந்து விசேஷமாய் நாடார்களால் ஏற்றுமதிசெய்யப்பட்டு இவ்வூரில் இறக்குமதியாகிற மிளகுவத்தல் வெங்காயம், காப்பிக்கொட்டையும் மற்றும் இதர நவதானியங்களுமேயாகும். ஏற்றுமதிக்க சரக்குகளை வைத்தே வர்த்தகஞ்செய்யும் மளிகைக்காரர்களும், விருதுபட்டி, மதுரை, முதலிய இடங்களில் பெரும் கொண்டு விற்பனை செய்துகொண்டுவருகிற ஜவுளிவர்த்தகர்களும் தங்கள் மனேஜர்களை இவ்வூர் வியாபாரத்தைக் கவனிக்க அனுப்பி அல்லது இவ்வூரில் ஷை வர்த்தகர்கள் பிராஞ்சு ஆபீஸ் ஏற்படுத்தி இவ்வூர் வியாபாரத்தைக் கவனிக்குங் காலம் எதிர்பார்க்கப்படுகிறது. நமது மஹாஜனசங்க மூன்றாவது கான்பரன்ஸில் அக்கிராஸனம் வகித்த கனம் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரவர்கள் செய்த உபன்யாசத்தில் "நான் நாடார் ஜாதியில் பிறந்தவனல்லவாதலால் வியாபாரச்சம்பந்தமாய் எனக்கு நன்

றாய்த் தெரியாது ஆகையால் வியாபாரச் சம்பந்தமாய் உங்களுக்கு ஆலோசனை கொடுக்க நான் திறமையுள்ளவனல்ல" என்று சொல்லியிருக்கிறார்கள் என்றபோதிலும் நாம் பெற்றிழந்த நாகரீகத்தையும் செல்வத்தையும் உன்னத பதவியையும் திரும்பவும் பெற்றுய்யும் மார்க்கத்தைக் காண்பிக்க நமக்குள் உதித்திருக்கிற "ஞானோதய"த்தின் அரிய முயற்சியாற் கைகூடவேண்டிய காரியங்களுள் இதுவும் ஒன்றென கனவான்கள் கவனிப்பார்களாக. சுபம்.

மதிகுல வழுதி.
கொழும்பு.

## கடம்பூர்.

(திருநெல்வேலி ஜில்லா.)

இவ்வூருக்குப் பெண்பாடசாலை அவசியமாக வேணுமென்று இரண்டு வருஷங்களுக்கு முன்னதாக அம்பலம் சி. தவசிப்பெருமாள் நாடார் பிரம்மஸ்ரீ R. பஞ்சாபிகேசய்யர் அவர்கள் இவர்களுடைய தூண்டுதலினாலும் பகவானுடைய அனுக்கிரகத்தாலும் நாடார் உறவின் முறையார்கள் சகாயத்தைக்கொண்டு மகமைப் பண்டிலிருந்து சம்பளமில்லாமல் கற்பிக்கத் தொடங்க நாடார் சரஸ்வதி பெண்பாடசாலை ஒன்று ஸ்தாபித்து அக்டோபர்மீ 18ம் உ முதல் திறந்து ஊர்ஜனங்களுக்குத் தெரியும்படி பிரசித்தம் செய்து கூடிய சபையில் நாடார் ஜியார்ஜ் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் பிரம்மஸ்ரீ R. பஞ்சாபிகேசய்யர் அவர்களும் ஹைஸ்கூல்மானேஜர் ஸ்ரீமான் க. அ. ரா. ம. மகாலிங்க நாடார் அவர்களும் நாடார் கல்விச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் க. அ. க. இராமலிங்க நாடார் அவர்களும் பெண்கல்வி என்பதைப்பற்றி உபந்நியாசஞ் செய்தார்கள் பெண்பாடசாலைக்கு ஸ்ரீமான் ச. ராமலிங்க நாடார் அவர்களை மானேஜராக நியமனஞ் செய்து விஜயஞ்செய்த கனவான்களுக்கு சந்தன தாம்பூலம் கொடுத்து சபை கலைந்தது. நமது வித்தியாசாலை நீடித்து வளர்ந்தேறும்படி பகவான் கிருபை செய்வாராக.

நாடார்குலாபிமானி.
கடம்பூர்.



## சுகாதாரம்.

(170-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

**மேற்கூறிய வஸ்துக்களில் நாம் உட்கொள்ள வேண்டிய விகிதம்.** பற்பல ஜனங்கள் உட்கொள்ளும் உணவுகளில் மேற்கூறிய வஸ்துக்களின் விகிதம் பலவிதமாயிருக்கின்றது. நம் தேசத்திலுள்ள ஜனங்களில் அநேகர் அரிசி காய், கறி, எண்ணெய், நெய் முதலியவைகளை மட்டுமே உட்கொண்டு ஜீவித்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் அவற்றோடு மாமிசமும் சேர்த்துப் புசிக்கிறார்கள். எஸ்கிமோ என்ற ஒரு ஜாதியார் மாமிசம் ஒன்றை மட்டுமே புசித்து வருகிறார்கள். நாம் உட்கொள்ளும் ஆகாரத்தில் சராசரி ஒருபங்கு உப்புவாயு சம்பந்தமான வஸ்துக்களுக்கு ஒன்பது பங்கு கரிசம்பந்தமான வஸ்துக்களிருக்கின்றன. ஆனால் பல நிபுணர்களின் அபிப்பிராயப்படி ஒரு பங்கு உப்புவாயு சம்பந்தமுள்ள வஸ்துக்களிருந்தால் கரி சம்பந்தமான வஸ்துக்கள் ஆறு பங்குதான் இருக்கவேண்டுமாம். மேற்சொல்லிய விகிதம் பருவம் முதிர்ந்தவர்களுக்கேயாகும். வளரும் பிராயத்தில் உப்புவாயு சம்பந்தமான வஸ்துக்கள் மேற் சொல்லியதைவிட அதிகமாகவேண்டும். சிறு குழந்தைகளுக்கு இயற்கையா யேற்பட்ட உணவாகிய பாலில் ஒரு பங்கு உப்புவாயு சம்பந்தமான வஸ்துக்களும் மூன்றரைப் பங்கு கரி சம்பந்தமான வஸ்துக்களுமிருக்கின்றன. வயது முதிர முதிர உப்புவாயு சம்பந்தமான வஸ்துக்களின் விகிதத்தைக் குறைத்துக் கொண்டு வரலாம். ஆனாலும் முழுவளர்ச்சியையும் அடையும் வரையும் உப்புவாயு சம்பந்தமான உணவுகள் தான் மிகுதியா யிருக்கவேண்டும் ஆகையால் குழந்தைகளுக்கு சோறு முதலிய உப்புவாயு சம்பந்தமற்ற பொருள்கள் அதிகமாகக் கொடுக்கக் கூடாது. பால்தான் சிறு பிள்ளைகளின் முக்கிய ஆகாரமா யிருக்கவேண்டும்.

உணவுப் பொருள்களின் விகிதமானது வயதிற்குத் தகுந்தபடி மாற வேண்டியதிருப்பதுபோல, வழக்கம், சீதோஷ்ணஸ்திதி, வேலை, வியாதி முதலியவைகளை யொத்தும் மாறவேண்டும். ஒருவிதமான உணவு சாப்பிட்டுக் கொண்டு வந்தவர்கள் திடீரென்று வேறு விதத்திற்கு உணவை மாற்றக்கூடாது. உணவை மாற்ற வேண்டியதிருந்தால் கொஞ்சங் கொஞ்சமாக மாற்ற வேண்டும். மேலும் குளிர்ந்த தேசத்திலுள்ளவர்களுக்கு தேகம் உஷ்ணமாயிருப்பதற்காக கொழுப்பு, எண்ணெய் சம்பந்தமான பதார்த்தங்கள் அதிகமாய் வேண்டும். அதிக வேலை செய்பவர்களுக்கும் மேற்கூறிய வஸ்துக்கள் மிகுதியாய் வேண்டும், வியாதிஸ்தர்களின் ஆகாரமானது வைத்தியர்களின் அபிப்பிராயத்தின் படி செய்யப்படவேண்டும்.

**நாம் சாப்பிடும் ஆகாரம்.** முற் கூறியபடி நாம் சாப்பிடும் ஆகாரத்தில் சாதாரணமாக போதுமான விகிதம் உப்புவாயு சம்பந்தமான வஸ்துக்களில்லை ஆகையால் போதுமான அளவு உப்புவாயுசம்பந்தமான வஸ்துக்களைச் சாப்பிடவேண்டுமானால் அளவுக்கு மிஞ்சிய கரி சம்பந்தமான வஸ்துக்கள் உட்கொள்ள வேண்டியதிருக்கின்றது. அதனால் நாம் அநாவசியமாக வயிற்றைப் பெரிதாக்கிக்கொண்டு அதிகமான கொழுப்பையும் உடம்பில் சேகரித்துவைக்கிறோம். மேலும் ஜீரணசக்தியும் குறைந்து விடுகின்றது ஆகையால் நாம் அதிகமாகச் சாப்பிடாமல் உணவில் உள்ள உப்புவாயு சம்பந்தமான வஸ்துக்களின் விகிதத்தை மட்டும் அதிகப்படுத்தவேண்டும்.

**நாம் சாப்பிடவேண்டிய உணவின் அளவு.** ஒரு வேலையும் செய்யாமலிருக்கும் ஒரு மனிதன் 105 ராத்தல் இடையுள்ளவனாயிருப்பின் அவனுக்கு கரிசம்பந்தமான வஸ்துக்கள் $11\frac{1}{2}$ அவுன்சும் உப்புவாயு சம்பந்தமான வஸ்துக்கள் 2 அவுன்சும் நெய்சம்பந்தமான வஸ்துக்கள் முக்கால் அவுன்சும் பலவித உப்புவகைகள் முக்கால் அவுன்சும் ஆக சுமார் ஒரு ராத்தல் உணவு வேண்டும் ஆனாலும் இந்த அளவை வயது வழக்கம் சீதோஷ்ண ஸ்திதி வேலை முதலியவைகளுக்குத் தகுந்தபடி மாற்றவேண்டும்.

(1) **வயது.** முன் சொல்லியபடி இளம் பிராயத்தில் உப்புவாயு சம்பந்தமான பதார்த்தங்கள் அதிகமாகச் சேர்க்க வேண்டும், மேலும் மொத்த உணவின் அளவு ஜாஸ்தியாயிருக்க வேண்டும். 26 ராத்தல் இடையுள்ள குழந்தைக்கு ஒரு ராத்தல் ஆகாரம் வேண்டும். பத்து வயதிற்கு மேற்பட்டால் 52 ராத்தலுக்கு ஒருராத்தல் ஆகாரம் வேண்டும் 15 வயதிற்குமேற்பட்டால் 80 ராத்தலுக்கு ஒருராத்தல் ஆகாரம்வேண்டும்

2. **வேலை.** அதிகவேலைசெய்தால் அதிக ஆகாரம்வேண்டும். வேலைக்குத்தகுந்த அளவு ஆகாரமில்லாவிட்டால் தேகம் இளைத்துப்போவதுடன் அநேகவித வியாதிகளும் உண்டாகலாம். கடினவேலை செய்யும் ஒருமனிதனுக்கு மேற் சொல்லிய அளவில் சுமார்ஒன்றரைப்பங்கு வேண்டும்,

3. **வழக்கம்.** பணக்காரர்கள் சாதாரணமாய் வேண்டியதைவிட அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். அப்படிச் சாப்பிடுவதனால் இலேசாய் ஜீரணமாகக் கூடிய வஸ்துக்களெல்லாம் ஜீரணமாகி ஜீரணமாகுவதற்கு கொஞ்சம் கஷ்டமாயுள்ள வஸ்துக்களெல்லாம் ஜீரணமாகாமல் வெளியேபோய்விடுகின்றன சாதாரணமாய் ஜீரணமாவதற்கு கடினமானவையே உடம்புக்கு சக்தியைத் தரக்கூடியவையாயிருக்கின்றன. ஆகையால் அவர்கள் அதிகமாகச் சாப்பிடும் பிரயோஜனமற்றவைகளை மட்டும் உடம்போடு சேர்த்துக்கொண்டு பிரயோஜனமுள்ள வஸ்துக்களில் பெரும் பான்மையும் வெளியேகழித்துவிடுகிறார்கள். சாப்பிடும் அளவைக்குறைத்தால் முதலில் கொஞ்சநாள் பசியினால் வருந்துவார்கள். ஏனென்றால் பழையவழக்கப்படி சத்துள்ள ஆகாரம் வெளியேபோய்விடும். ஆனாலும் கொஞ்சநாட்போனால் ஜீரணசக்தி அதிகமாகிசத்துள்ள ஆகாரமும் ஜீரணமாக்கப்பட்டு உடம்போடு சேருகின்றது. ஆகையால் அவர்கள் உணவின் அளவைக்குறைத்த போதிலும் முன்னிலும் அதிகமாகப் போஷிக்கப் படுகிறார்கள். இன்னும் தானிய உணவுகளையே சாப்பிட்டு வயிற்றைப் பெரிதாக்கிக் கொண்டவர்களுக்கு, உப்புவாயுசம்பந்தமான நல்ல உணவைக் கொடுத்தால் முதலில் உணவின் குணம் முன்னிலும் மேலாயிருந்த போதிலும் அளவு குறைந்து போவதால் பசியால்வருந்துவார்கள். ஆனால் வரவர சரியாய்ப் போய்விடும்.

4. **சீதோஷ்ணஸ்திதி.** குளிர்ந்ததேசங்களில் அதிகமாக உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடிய உணவுப் பொருள்களை உட்கொள்ள வேண்டும். இனிநாம் நமக்குக் கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களின் குணகுணங்களை ஆராய்வோம். உணவுப்பொருள்களில் முக்கியமானவை தானியங்களே. தானியங்களைத்தவிர பயறு வகைகள், மாமிசம் முதலியன எண்ணெய் நெய் முதலியவை, காய் கனிகள் ஆகிய இவைகளும் உணவுக்கு உபயோகப் படுத்தப் படுகின்றன.

5. **தானியவகைகள்.** ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தானியம் ஜாஸ்தியாய் விளைகிறதோ அந்த தானியமே சாதாரண ஜனங்களின் முக்கிய உணவுப் பொருளாயிருக்கின்றது. பின்வரும் அட்டவணையிலிருந்து ஒவ்வொரு தானியத்திலுமிருக்கும் வஸ்துக்களின் அளவைத்தெரிந்துகொள்ளலாம்.

| தானியம் | உப்புவாயுசம்பந்தமான வஸ்துக்கள். | கரிசம்பந்தமான வஸ்துக்கள். | எண்ணெய் | உப்புகள் | ஜலம். | உபயோகமற்றநார்சம்பந்தமான வஸ்துக்கள். | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| அரிசி. | $6\frac{1}{2}$ | $79\frac{1}{10}$ | $\frac{6}{10}$ | $\frac{6}{10}$ | $12\frac{8}{10}$ | $\frac{4}{10}$ | 100 |
| கேழ்வரகு. | $7\frac{3}{10}$ | $73\frac{2}{10}$ | $1\frac{1}{2}$ | $2\frac{3}{10}$ | $13\frac{1}{3}$ | $2\frac{1}{2}$ | 100 |
| சோளம். | $9\frac{3}{10}$ | $72\frac{3}{10}$ | 2 | $1\frac{7}{10}$ | $12\frac{1}{2}$ | $2\frac{1}{3}$ | 100 |
| மக்காச்சோளம். | $9\frac{1}{2}$ | $70\frac{7}{10}$ | $3\frac{2}{3}$ | $1\frac{7}{10}$ | $12\frac{1}{2}$ | 2 | 100 |
| கம்பு. | $10\frac{2}{3}$ | $71\frac{1}{2}$ | $3\frac{3}{10}$ | 2 | $11\frac{3}{10}$ | $1\frac{1}{2}$ | 100 |
| மைதா | $12\frac{2}{3}$ | $69\frac{2}{3}$ | $3\frac{2}{3}$ | $1\frac{2}{3}$ | 12 | 1 | 100 |
| கோதுமை | $13\frac{1}{2}$ | $68\frac{2}{3}$ | $1\frac{1}{3}$ | $1\frac{7}{10}$ | $12\frac{1}{2}$ | $2\frac{7}{10}$ | 100 |

மேலிருக்கும் அட்டவணையைக் கவனிக்குமிடத்து பொதுவாக தானியங்களில் உப்புவாயு சம்பந்தமான வஸ்துக்கள் குறைவாகவும் கரி சம்பந்தமான வஸ்துக்கள் அதிகமாக இருப்பதையும் காணலாம்.

*S. Ramasamy.*

# இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் திருவாய்மொழி

## கடவுள் அன்பர்களது ஹிருதயத்தில் எழுந்தருளல்.

வினா:—அன்பர்களது ஹிருதயத்தில் கடவுள் எழுந்தருளியிருப்பதற்கு அடையாளங்கள் எவை?

விடை:—அருணோதயமானது சூர்யோதயத்தை முன்னறிவிப்பது போல் அவாவின்மையும் அகத்தூய்மையும் நல்லொழுக்கமும், ஜீவனுக்கு ஜகதீசன் பிரத்தியக்ஷமாவதை முன் நின்று காட்டுகின்றன.

அரசன் தன் சேவகன் தனக்குச் செய்யும் விருந்தை ஏற்பதன் பொருட்டு அவன் குடிலுக்குச் செல்லு முன்னமே அச்சேவகன் தன்னை முறைப்படி எதிர்கொண்டு மேன்மைப்படுத்துவதற்கு வேண்டிய ஆஸனம் பூஷணம் போஜனப் பதார்த்தம் முதலியவற்றை தன் சொந்தத்திலிருந்தே அனுப்புவதுபோல பகவான் மனிதனது ஹிருதயத்தில் பிரஸன்னமாவதற்கு முன்னமே வாத்ஸல்யம் பக்தி பிரேமை முதலிய ஸத்குணங்கள் பக்தனது அன்பாற் கசிந்துருகும் ஹிருதயத்தில் உதிக்குமாறு அருள்புரிகின்றார்.

வினா:—மனம் எந்நிலையில் இருக்கையில் பகவத் தரிசனம் உண்டாகின்றது.

விடை:—மனம் நிச்சலமாயும் நிர்மலமாயுமிருக்கையில்தான் பகவானைத் தரிசிக்கலாம். இகலோக வாஞ்சையெனும் காற்றால் சஞ்சலமாய் அலையும் மனக்கடலில் ஈசுவர பிரதிபிம்பமாவது ஈசுவர தரிஸனமாவது உண்டாவது அசாத்தியம்.

ஆனால் ஆசையெனும் சண்ட மாருதத்தால் இருதயாகாசம் மோகப்பட்டிருக்கிறவரையில் அதில் ஈசுவர ப்ரகாசத்தைக் காண வழியேயில்லை. பகவதநுபவத்தில் மதித்து நிச்சலமாயும் ப்ரசாந்தமாயும் நிற்கும் இருதயத்திற்றான் அத்திவ்ய தேஜோமய தரிஜனம் உண்டாகின்றது.

(i) இவையெல்லாம் யானே (ஸோஹம் ப்ரஹ்ம) (ii) இவையெல்லாம் நீயே (தத்துவம் அஸி ஸர்வம் ப்ரஹ்மமயம்)



(iii) நீ ஆண்டான் நான் அடிமை (ஸேவ்ய ஸேவகபாவம்) என்னும் இம்மூவகை நிலைகளில் எதையாயினும் பின்பற்றி பரிபக்வம் அடையும் மனிதனுக்குப் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் கைகூடுகின்றது.

பதியே பரதெய்வமென்று போற்றிப்பக்தி செய்யும் பெண்மணியானவள் ஸதியென்றும், பதிவிரதையென்றும் புகழ்பெற்றுத் தன்பிராண நாயகனது அன்பைப் பெற்று மகிழ்வதுபோல், தன் இஷ்டதேவதையைப் பக்தியோடு வழிபடும் அன்பனும் ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் பெற்றானந்திக்கின்றான்.

ஸ்பரிசவேதிக்கல்லின் பரிசத்தால் எஃகாலான கத்தி பொன்மய கத்தியாகமாறி அதன் வடிவம் மாத்திரம் முன்போலவே இருப்பினும், எஃகு கத்தியைப் போல் எவருக்கும் தீங்கு செய்யாமற் போகின்றதுபோல் ஸர்வேசுவரனது சேவடிகளைப் பணிந்த மனிதனது வெளிவடிவம் மாறாதிருப்பினும் அவன் பாவச் செய்கைகள் மாத்திரம் முன்போல் ஒன்றும் புரியான்.

அவன் கடவுளது, திருவுருவக் காட்சியைக் கண்டுவிட்டான் அவன் இயல்பும் அதுமுதல் மாறிவிட்டது.

### கடவுளைக் கண்டவனை-உலகம் பாதிக்காது

ஒருவன் சந்தைகூடும் இடத்திற்குத் தொலை தூரத்திலுள்ளவரையில் ஹோ! ஹோ! என்ற ஒருவித ஆரவாரத்தை மாத்திரம் கேட்கின்றானாயினும், சந்தைக்கு சென்றபிறகு முன்போல் ஆரவாரம் கேட்பதொழிந்து ஒருவன் உருளைக்கிழங்கு பேரம், செய்வதையும், மற்றொருவன் கத்தரிக்காய் பேரம், செய்வதையுந் தெளிவாய்த் தெரிந்து கொள்வது போல ஸாதகன் ஸர்வேசுவரனுக்குத் தூரமாயிருக்கும் வரையில் மதவாதிகளின் வாதப்ரதிவாத, விதண்டாவாத கோலாஹலத்தை மாத்திரம் கேட்பவனாகிறான். ஆனால் அவன் பகவத் ஸாமீப்யத்தையடையும் பொழுது இச்சமய வாதிகளின் விதண்டா வாதங்கள் ஒழிந்து போகப் பரபதியின் அரிய ரஹஸ்யங்களையெல்லாம் அவன் கரதலாமலகம் போல் அறிகின்றான்.

கண்ணாம்பூச்சியெனும் விளையாட்டில் தாய்ச்சியைப் போய் தொட்டுவிடுகிறவன் குருடனாவதில்லை. அதுபோல கடவுளையொரு

முறைக் கண்டுவிட்டவனை இவ்வுலக பாசங்கள் கட்டுப்படுத்தா. தாய்ச்சியைப் போய் பிடிக்கிறவன் திருடனுக்ககப்படாமல் சுயேச்சையாய்த் திரிவது போல் எம்பெருமானது திருவடிகளைத் தொட்ட தொண்டர்கள் இப்பிரபஞ்ச நாடக அரங்கத்தில் நிர்ப்பயமாய் ஓடியாடி உலக மாயாபாசங்களினின்றும் விடுதலை பெறுகின்றமையால் அவர்களை மீண்டும் எதுவும் ஒருகாலும் பந்திக்காது.

பால் நீருடன் விரைவாய்க் கலப்பது போல் அதிலிருந் தெடுக்கப்பட்ட வெண்ணெய் மாத்திரம் நீருடன் கலக்காது அதின் மேலேயே மிதக்கின்றது போல் ஆத்மா ப்ரஹ்ம ஸ்வரூபமானபின்னர் பக்குவமடையாத பலகோடி ஆத்மாக்களுடன் அளவளாவியிருப்பினும் அப்பிரபஞ்ச ஸஹவாஸத்தால் அவனுடைய நிர்மல விமலனுக்கு மாத்திரம் யாதொரு ஹானியும் நேரிடாது.

பரிசவேதியின் பரிசத்தால் தங்கமாய் மாறின இரும்பு பூமியின்கீழ் புதைக்கப் படினும் குப்பையுடன் குப்பையாய் எறியப் படினும், எப்பொழுதும் தங்க மாகவே இருக்குமே யல்லாது, பழையநிலையாகிய இரும்பின் நிலையை யடையாது. அதுபோலத் தான் ஒருமுறையேனும் எம்பெருமானது திருவடிகளில் மனதைப் பதித்தவனுடைய நிலையும் அவன் ஜனங்களின் ஆரவாரம் நிறைந்த உலகத்தில் இருப்பினும், நிர்மானுஷ்யமான ஆரண்யத்தில் இருப்பினும் ஒருகாலும் எதனாலும் களங்கமடையான்.

## கடவுளைக் கண்டவனுக்கு.
## உலகவின்பங்களிலுள்ள பராமுகம்

அமுதத்துக்கொப்பான இனிமையுள்ள கரும்பை ஒருமுறை சுவைத்தவன் பேய்க் கரும்பைத் தின்னவிரும்பாதது போலும், அரசர் மாளிகைகளில் ஹம்ஸதூலிகாதல்பத்தில் நித்திரைசுகமநுபவித்தவன் அழுக்கு நிறைந்த அம்பட்டக் குடிசைகளில் தூங்க ஆசைகொள்ளாதது போலும், பரமாநந்த திவ்யாமிர்தரஸத்தை யொருமுறை பருகினவன் உலகத்தின் நிலையில்லா அற்ப சுகங்களில் மகிழ்வடையான்.

அரசனையே அருங்காதலனாகப் பெற்ற பாக்கியவதி தெருவில் திரியும் பிச்சைக்காரனுடைய காதல் விண்ணப்பத்தை ஏற்காது



துச்சமாய்க் கருதுவது போல், எம்பெருமானது திருவருளைப் பெற்ற பக்தன் உலகத்தின் தாழ்ந்த சுகங்களை விரும்பான்.

நூதனமாய் விவாஹம் செய்யப் பெற்ற வனிதையானவள் பிள்ளை பெறுகின்ற வரையில் வீட்டுக் காரியங்களை செய்வதிலேயே சிரத்தையாயிருக்கின்றாள். ஆனால் அவளுக்கு ஒருபிள்ளை மாத்திரம் பிறந்துவிட்டால், அதுமுதல் வீட்டுக்காரியங்களில் அவளுக்கு கவனம் குறைகின்றது. அவற்றைச் செய்வதில் அவ்வளவு திருப்தியும் உண்டாவதில்லை. அதற்குப் பதிலாக அவள் புதிதாய்ப் பிறந்த குழந்தையை நாள் முழுவதும் தாலாட்டிச் சீராட்டி உள்ளம் பூரித்து முத்தமிடுகின்றாள். அதுபோலவே மனிதனும் அஞ்ஞான தசையில் பலவிதத் தொழில்களைப் புரிவதில் சுறுசுறுப்பாயிருந்தாலும் ஹிருதய கமலத்தில் எம்பெருமானைத் தெரிசித்த உடனே, அவற்றிலெல்லாம் திருப்தியடையானாகி அவற்றை விட்டுவிடுகின்றான். அதுமுதல் எம்பெருமானை சேவிப்பதிலும் அவனது திருவுள்ளத் துக்குகப்பான கைங்கரியங்களைப் புரிவதிலுமே ஆசக்தமடைந்து மற்றெந்தத் தொழில்புரிவதிலும் மனமற்றவனாகி அப்பிரஹ்மானந்தானுபவத்தினின்றும் மனதைப் பறிக்க விருப்பமற்றவனாகின்றான்.

## ஞானமும், பக்தியும்.

ஞானமும் பக்தியும் முடிவில் ஏகமேயன்றி வேறல்ல. சுத்த ஞானத்திற்கும் சுத்த பக்திக்கும் வேற்றுமையே கிடையாது. ஞானத்தைப் புருஷனுக்கும் பக்தியைப் பெண்ணுக்கும் ஒப்பிடலாம். புருஷனாகிய ஞானமானது எம்பெருமானது மாளிகையின் வெளியறைகள் வரையில்தான் செல்லலாம். ஆனால் அவனுடைய அந்தப்புரத்தில் ஸ்திரீ ரூபமாகிய பக்தி தவிர வேறெவரும் பிரவேசிக்க முடியாது. இந்தப்பக்தி ஒன்றுக்குத்தான் பரமேசுவரனது அந்தரங்க ரகஸ்யங்களை யெல்லாம் அறியும் சுதந்தர முண்டு.

ஸ்ருஷ்டிக்குச் சிவன் சக்தி எனும் இருவரும் அவசியம். உலர்ந்த மண்ணால் ஒரு குயவனும் குடத்தைச்செய்தல் முடியாது. ஜலமும் வேண்டியிருக்கின்றது அதுபோல் சக்தியின்றி சிவனே சிருஷ்டித் தொழிலை நடாத்துதல் முடியாது.

## விக்ரஹாராதனம்.

குழந்தைகள் விளையாடுவதற்பொருட்டு மரத்தாற் செய்யப்பட்ட பழமும் யானையும் உண்மையான பழத்தையும் உயிருள்ளயானையையும் ஞாபகப்படுத்துவதுபோல் ஜனங்கள் ஆராதிக்கும் விக்ரஹங்களும் நிராகாரமாயும் நித்யமாயுமுள்ள பிரஹ்மத்தை ஞாபகப்படுத்துகின்றன.

விக்ரஹாராதனங் கூடாதென்று கண்டித்துவந்த கேசவசந்திரசேனரை நோக்கிப்பகவான் ஸ்ரீராமகிருஷ்ணதேவர் கூறியது:- இவ்விக்ரஹங்கள் ஏன் உமது மனதில் மண் கல் கட்டைமுதலிய எண்ணங்களை உண்டாக்குகின்றன இவ்வுருவங்களின்மேல் சுத்தவித்யாநந்த சித்ஸ்வரூபிணியான ஜகதம்பிகையின் ஸ்வரூப ஸாந்நித்தியத்தை நீர் ஏன் அனுபவித்தல் கூடாது? நித்தியமாயும் நிராகாரமாயும் உள்ள ப்ரஞ்ஞாநகநமாகிய பரப்ரஹ்மத்தின் திவ்வியமங்கள விக்ரஹங்களை இப்பிரதிமைகள் என்றறிந்துய்வீராக.

தான் பூஜிக்கும் தேவதா விக்ரஹங்களை ஸர்வேச்வரனது லிங்கங்கள் (குறிகள்) எனக் கருதுகின்றவன் ஈச்வரனையே யடைகின்றான் ஆனால் அவைகளை மணலாலும் கல்லாலும் கட்டையாலும் செய்த வெறும் பொம்மைகளென்று நினைப்பவனுக்கு அவ்விக்கிரஹாராதனம் யாதொருபயனையும் அளிக்காது.

## ஸர்வம்ப்ரஹ்மமயம்.

குருவானவர் ஸகலபதார்த்தங்களும் நாராயணஸ்வரூபம் என்று சொல்ல அதன் லக்ஷியார்த்தத்தையுணராது வாச்சியார்த்தத்தை மாத்திரம் அறிந்த சிஷ்யன் தெருவிற் போய்க்கொண்டிருக்கையில் ஒருயானையைக்கண்டான் யானைப்பாகன் அம்பாரியின் மேலிருந்து ஒதுங்கு என்று உரைத்துச் சொல்வதைக் கேட்ட சிஷ்யன் தனக்குள் ஏன் ஒதுங்க வேண்டும் நானும் நாராயணன், யானையும் நாராயணன், நாராயணனிடத்தில் நாராயணனுக்கு என்ன பயம் என்று சிந்தித்தான் இவ்வாறு சிந்தித்துக்கொண்டே அவன் ஒதுங்காமலிருந்தான் கடைசியில் யானை அவனைத் தன் துதிக்கையால் தூக்கிக்குப்புறக்கீழே மோதிற்று அதனால் அவன் மிக்க காயப்பட்டுத் தன்குருவினிடம் சென்று தன்திரு



விளையாட்டையெல்லாம் அவருக்குரைத்தான் அதற்கவர் சரிதான் நீயும் நாராயணன் யானையும் நாராயணன்தான் ஆனால் யானைப்பாகனாகிய நாராயணன் மேலேயிருந்து உன்னை எச்சரித்தனனே அதை யேன் லக்ஷியம் செய்யவில்லையென்றார்.

கடவுள் நம்மை பசிநோய் போஷித்து வருவதாலேயே அவர் கருணாநிதி என்று நாம் சொல்லக்கூடாது ஏனெனில் பிரதி தகப்பனும் பெற்ற குழந்தைகளுக்கு அன்னமளித்துக் காக்கத்தான் வேண்டும் ஆனால் அவர் நம்மைத் தீய நெறியிற் செல்லாதபடி தடுத்துக் காத்துப் பாவமென்னும் படுகுழியில் விழாதபடி தடுத்தாட்கொள்ளுங் காலத்தில்தான் அவர் உண்மையான கருணாகரக்கடவுளாய் விளங்குகின்றார்.

## பாபவிமோசனம்.

மண்ணிற் புரண்டு உடம்பை அழுக்காக்கிக் கொள்வது குழந்தையின் சுபாவமாயினும் அதன் தாய் மாத்திரம் அதை அழுக்குடன் இருக்கவிடாமல் அழுக்கை நீக்கிவிடுகின்றாள் அதுபோலவே பாவம் புரிவது மனிதனது சுபாவமாயிருப்பினும் அவன் பாவம் புரிவது வாஸ்தவமாயினும் அவனைப் பாவத்தினின்று விமோசனஞ் செய்விக்க எம்பெருமான் [illegible] அவனிடமிருந்து வாஸ்தவமாயிருக்கின்றது.

அறையில் விளக்கைக் கொணர்ந்தமாத்திரத்தில் அநேகப கோடி காலமாயிருந்த இருளெல்லாம் சொல்லாமல் ஓட்டம் பிடிக்கிறது ஸர்வேச்வரனது கருணைநிறைந்த ஒருகடாக்ஷலேசத்தின் முன் எண்ணித் தொலையாப்பிறவிகளின் ஸஞ்சிதப் பழவினைகள் பறந்தோடிப் போகின்றன.

ஹ்ருதயத்தைச்சுட்டிக்காட்டிப் பகவான் ராமகிருஷ்ணர்கூறியதாவது:- இதையிங்கேயுடையவன் அங்கேயும் (வெளியுலகத்தைச் சுட்டி) உடையவனே கடவுளைத்தன் அகத்தே காணுதவன் புறத்தேயும் ஒருகாலும் காணுன் ஆனால் எம்பெருமானைத் தன் உள்ளமாகிற ஆலயத்திலே பார்க்கின்றவன் அவனை பிரபஞ்சமாகிற ஆலயத்திலும் பார்க்கின்றான்.

ஒரு சிறுவன் தனக்கு பசியுண்டாகும் பொழுது தன்னைத் தூக்கத்தினின் றெழுப்புமாறு தன் தாயை வேண்ட அவள் உன் பசியே உன்னை யெழுப்பி விடும் யென்றாள்.

பகவானை யாராதிக்கலே பரமவிரதமெனக் கொண்டு பரப்ரஹ்மத்தினிடத்தே ஸகாசித்தத்தை செலுத்தியுள்ள புருஷனது மனம் இவ்வுலக வியாபாரங்களிற் பற்று கொள்ளாது. பற்று ஆசா பாசத்தாற் கட்டுண்டவனது மனம் இவ்வுலக வியாபாரங்களிற் பற்று வைத்திருக்கின்றமையால் அவன் மதத்து வேஷங்களைப் பெரிதும் பாராட்டி அஹங்காரத்துடன் கூடியிருப்பான்.

ஜீவாத்மாவின் இயல்பையறிந்து கொண்டு நான் நீ! என்ற சொற்களின் உண்மைப் பொருளை யுணர்ந் தவனேபரப்ரஹ்மத் தையறிந்தவன் ஆவான். என்வீடு என்சரீரம் என்குடும்பம் என்ற அகம்பாவம் தீர்க்கவிசாரணை யுள்ளவனுக்கு உண்டாகாது ஞானோதயம் உண்டான பிறகு அகம்பாவம் அழிந்து போய் விடும். உள்ளிப் பூண்டின் மேலுள்ள புரைகளை ஒவ்வொன்றாய் உரித்துக் கொண்டே வந்தால் கடைசியில் ஒன்றுமிருந்து நிற்காதது போல் ராகத்வேஷாதிகளைப் படிப்படியாய் வென்றுவிட்டால் பின்னர் நான் என்றபாவனையே அழிந்து போய்விடும் தத்வ விசாரம் பூர்ணமாய்ச் செய்தவனுக்குப் பரப்ரஹ்மம் ஒன்றே நித்தியமாய்த் தோன்றும் அஹம்பாவம், அழியாமல் பரப்ரஹ்மஸ்வரூபஸாக்ஷாத்காரம் உண்டாகாது.

பாரிஜாதாபஹரண நாடகமாதிகையில் ஸூத்திரதாரன் வாழ்த்துரையில் ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரார்த்திக்கும் பொழுது ஸ்ரீ கிருஷ்ண வேஷம் அரங்கத்துக்கு வராமல் நாடகக்கொட்டகத்தில் நாரதர் பிரவேசித்து ஸ்ரீ கிருஷ்ணனை பிரார்த்தித்த உடனே கிருஷ்ண வேஷம் பிரவேசிக்கின்றது போல் மனிதன் உரத்தகுரலால் பகவனை எவ்வளவு பிரார்த்தித்தும் அவர் பிரத்யக்ஷமாகாமல் உள்ளன்பாற் கசிந்துருகி ஒலமிடும் பொழுது பிரசன்னராகின்றார்.

"அஹம்பாவம் அழிந்தாலன்றி கைவல்லியம் கைகூடாது"

மாயாபடலத்தைப் பிளந்து பரப்ரஹ்மவஸ்து ரூபத்தைக்காணப் பெறுவதற்கு உபாயம் பகவானை யருள வேண்டிக்கொள்கையால்



மாயையை யொழிக்க வேண்டுமென்று நிர்மலமானவிரதம்பூண்டு அவரையே ஸதாகாலம் ஆராதிக்க வேண்டும்.

ஆக்ரோசம் அழிய கோபமும் காமமும் கடவுளை யென்னும் அவனை அண்டர் நாடும் ஆதாரமென்றும் ஆதிகாரண மென்றும் உறுதியாய் நம்பி அஹங்காரமென்பது சிறிதுமின்றி உயிர் வாழ்வதே மோக்ஷமடைவதற்கு உத்தமமான ராஜமார்க்கமாம். சுபம் சுபம் (தொடரும்)

கு.ச. முத்து நாடான்,
அருப்புக்கோட்டை

## நம் நாடர்குல நண்பர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

ஸ்வாமி தெரிசனத்திற்கும் வியாபாரம் வெளியிடங்களில் கொள் முதல்செய்வதற்கும் எந்தெந்த இடங்களிலெல்லாம் நம் முன்னோர்கள் பேட்டை என்றும் மண்டபம் என்றும் கட்டிவைத்து போதுமானவசதிகள் செய்துவைத்திருக்கிறார்கள். அவர்கள் எண்ணப்பிரகாரம் நாம் தற்போது புதிதாய் விசேஷமாகப் போய்வரக்கூடிய விடங்களில் வசதிகள் தற்காலத்தில் செய்யப்படாத காரியம் கவனிக்கத்தக்கதே.

பொதுவாக இந்தியாவின் தெற்கு எல்லை பிரதேசத்தில் உள்ளவர்களாகிய நம் ஜாதியார்களுக்கு இச்சென்னையே முக்கிய தலைநகர். இந்நகரம் பெரும் வியாபாரத்திற்குரிய வசதிக்கேதுவாய் பல ரெயில் பாதைகள் ஒன்று சேருமிடமாய்இருப்பதுடன், கப்பல் துறைமுக பட்டணமாயுமிருக்கிறது. மேலும் அநேக ஜில்லாக்களின் ராஜீக கோர்ட்டுகளுக்கும் சகல நன்மைகளையும் விளைவிக்கத்தக்க கல்விக்கும் தலைமை வகித்திருக்கிறது.

இவ்விடத்தில் நம் ஜாதியார் எவ்வித வசதிகளையும் செய்யாமலிருந்தது நம் குலத்துக்கே ஓர் பெருங்குறையாகும் என்பதில் ஐயமில்லை.

இச் சென்னையில் நம் குலத்தவரால், "உயர்தர பள்ளிக்கூடம்," "லாட்ஜ் (தங்கும் இடம்) "லைப்ரேரி" (வாசக சாலை) "தேவாலய உற்சவம்" "மதக்கல்வி" "வியாபாரக்கல்வி" "கைத்தொழில் கல்வி" "விவசாயக் கல்வி" "தேகப்பயிர்ச்சி கல்வி" "பத்திரிகை" முதலான அவசியமான காரியங்கள் ஏற்பட்டால் விசேஷ பலன் கிடைப்பதுடன் இங்கும் நம் ஜாதியார் உள்ள இடங்கள் எங்கும் பெருங்கீர்த்தி உண்டாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மேற்கண்ட நன்மைகளை விரும்புவர்களாகிய இங்குள்ள நூறுக்கு மேல்பட்ட வீட்டுக்காரர்களாகிய நாங்கள் பல இடங்களிலுமுள்ள நம், மரபினர் ஒவ்வொருவரையும் நம்பி இங்கு ஓர் சங்கம் ஏற்படுத்திருக்கிறோம்

இச்சங்கத்தின் பெயர் "சென்னை பாண்டியகுல க்ஷத்ரிய நாடார்கள் ஐக்கிய சங்கம்"

இச்சங்கத்தின் ஆதரவின் பேரில் இங்கு மகமை ஏற்படுத்தி வசூல் செய்து வருகிறோம். வெளியூர்களிலிருக்கும் நம் இனத்தவர்கள் இவ்விடத்தில் வியாபாரம் வாங்குவதற்கும் விற்பதற்கும் மகமை ஏற்படுத்தி நம் ஆறுவர் உறைமுறைகளுக்கும் வியாபார ஸ்தலங்களாகிய மதுரை தூத்துக்குடி சாத்தூர் உறைமுறைகளுக்கும் தெரிவித்திருக்கிறோம்.

இந்த சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்படுவதற்கு வேலைகள் நடந்து வருகின்றன அதற்கு விதிகள் நம்மவர்கள்யாரும் எழுதி இச்சங்கசெக்ரட்டெரிக்கு அனுப்பலாம். இவ்வருஷம் கார்த்திகை மாதத்துவக்கத்தில் ரிஜிஸ்தர் செய்ய நிச்சயித்திருப்பதால் அதற்குள் நம் சகோதரர்கள் பலரிடமிருந்து வரும் விதிகளையும் அனுசரித்து பல வக்கீல்களையும் யோஜனை செய்து ரிஜிஸ்தர் செய்யபடும். உடனே ரிஜிஸ்தர் விவரங்கள் பூராவும் அச்சிட்டு பகிரங்கப் படுத்தப்படும். ரிஜிஸ்தர் ஆன பின் மூன்று மாதத்திற்கு ஒருதடவை ஸ்டாண்டிங் கமிட்டி மெம்பர்கள் சாதாரண மெம்பர்கள் இவர்களைக்கொண்டு மீட்டிங்கூட்டப்படும்.

மீட்டிங்குக்கு வெளியூர் மெமபர்கள் தவாறாது வந்து சேரவும் அல்லது தங்கள் ஏஜெண்டுகளை அனுப்பவும் கோரப்படுகிறார்கள். தவறினால் மீட்டிங்கில் நடந்த தீர்மானங்களுக்கு சம்மதித்தவர்களாக பாவிக்கப்படுவார்கள் சாதாரண மெம்பர்களும் ஓட் கொடுக்க பாத்தியப்பட்டவர்களாக யிருப்பார்கள்.

பணம் இருப்பு எந்த(Bank)பாங்கில் வைக்கப்பட வேண்டுமென்பதை மீட்டிங்கில் தீர்மானிக்கப்படும்.

மீட்டிங்கில் தீர்மானம் இல்லாமல் பணத்தைச் செலவு செய்ய இச்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.
மூன்று மாதத்திற்கொரு முறை வசூல் தொகையின் வரவு செலவு இருப்பு விவரம் அச்சிட்டு பகிரங்கப்படுத்தப்படும்.

நம் ஜாதி முன்னேற்றத்திற்குரிய முக்கியமான விஷயத்தை ஸ்டாண்டிங் கமிட்டி மெம்பர்கள் இச்சங்க செக்ரட்டெரிக்கு தெரிவித்தால் அது மீண்டிங்கில் ஆலோசனைக்குக்கொண்டு வரப்படும். சாதாரண மெம்பர்கள் பிரேரணைகள் கவனிக்கப்படமாட்டாது.



ஸ்டாண்டிங் கமிட்டி மெம்பர்கள் ஆறுமாதகாலத்திற்கு ரூபாய்2–0–0 வீதமும் சாதாரண மெம்பர்கள் ஆறுமாசத்திற்கு ரூபாய் 1–0–0 வீதமும் அட்வான்ஸாக செலுத்திவரவேண்டும். ரிஜிஸ்தர் ஆனபின் கட்டணத்தை அனுபிக்க மெம்பர்களுக்கு தெரிவிக்கப்படும்.

சென்னை பாண்டியகுல க்ஷத்திரிய நாடார்களின் ஐக்கியசங்கம்.

மதறாஸ், மணியக்கார சவுல்ட்ரீ ரோட். 60.

செக்ரட்டெரி, (ஒப்பம்) க. வே பொன்னையா நாடர்.

பொதுவிஷயங்கள்.

உலகத்தில் சேவரியம் முழுதும் தங்கப்பவுனாக மாற்றப்படுமானால் அதைக்கொண்டு நேர்த்தியான இருப்பு பாதை இந்தியாவில் இரண்டாயிரத்தாண்டு துறைபோகவேண்டியிருக்குமென்று ஒருசிபுணர் மதிப்பிடுகிறார்.

* * *

அமெரிக்காவில் மிஸ்டர் ப்ரிஸ்பேன் என்ற ஓர் பத்திராதிபர் இருக்கிறார். அவருடைய பத்திரிகைக்கு 20 லட்சம் சந்தாதாரர்கள் இருக்கின்றனர். அமெரிக்கப் பிரசிடெண்ட் வில்ஸனைவிட அவர் அதிகச்சம்பளம் வாங்குகிறார் என்று அமெரிக்கா அவ்வளவு ஓர் இந்திய கனவான் அறிவிக்கிறார்.

* * *

பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்ட இந்தியப் பிரதேசங்களின் மொத்தவிஸ்தீரணம் 1,093,074 சதுரமைல்கள். 1917-ம் வருஷத்தில் ஆயுதந்தரிக்க கொடுக்கப்பட்ட லைசென்ஸ்களின் மொத்தத்தொகை 136707 அதாவது 8 சதுர மைலுக்கு ஒரு லைசென்ஸ் கிடைக்கிறது. இந்தியாவின் மொத்த ஜனத்தொகை சுமார் 24½ கோடி இவ்வளவு ஜனத்தொகைக்கு 136707 லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் மொத்தமுள்ள நகரங்களினுடையவும் கிராமங்களினுடையவும் தொகை 584322. இதின்படி 4 கிராமத்திற்கு ஒரு லைசென்ஸ்தான் கொடுக்கப்பட்டு ... ... ...

* * *

இங்கிலாந்தில் மிஸ்டர் ஆர்னால்ட் பென்னட் என்ற ஓர் நாவலாசிரியர் வருஷத்துக்கு 30 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார். அவர் நாவல்கள்

எழுதுவதில் பேர் போனவர். ஆயிரம் வார்த்தைகளடங்கிய ஓர் வியாசம் எழுதினால் அவருக்கு 105 பவுன் சம்பளம் கொடுக்கப்படுகிறதாம். அவர் வக்கில் தொழிலைவிட்டு பத்திரிகைத் தொழிலுக்குவந்தவர்.

* * *

கிரேட் பிரிட்டனில் சென்ற செப்டம்பர் மாசம் 5-ந் தேதி கறவைப் பசுக்களின் சந்தை யொன்று கூடியது. அச்சந் ஒருகிராமத்தில் வளர்க்கப் பட்டு சந்தைக்கு கொண்டு வரப்பட்டிருந்த கறவை மாடொன்று 4725 பவுனுக்கு ஏலம் போயிற்றாம்.

* * *

## நமது சந்தாநேயர்களுக்கோர் விஞ்ஞாபனம்.

அச்சாபீசில் கம்பாஸ்டர்களில் சேர்ந்தாப்போல் நாலைந்து பெயர்கள் புதியசுரத்தினால் பீடிக்கப்பட்டு வேலைக்குவராததுநிமித்தம் நமது சஞ்சிகை உரியகாலத்தில் பிரசுரஞ்செய்யமுடியாமற்போய்விட்டது. எதிர் பாராத இச்சம்பவத்தினால் ஏற்பட்டகாலதாமதத்தைப்பற்று நமது நேயர்கள் பாராட்டமாட்டார்களென்று நம்புகிறோம்.

ப—ர்.

## யுத்தக்குறிப்பகள்.

மகாயுத்தமானது நமது நேசதேசங்களுக்கு பூரணஜெயத்துடன் ஒருவாறு முடிவுக்குவந்துவிட்டது. சத்துருக்களுக்கு நமது நேசதேசங்கள் விதித்த நிபந்தனையை சத்துருக்கள் ஒப்புக்கொண்டு விட்டபடியால் நாளது நவம்பர்மாசம் 11வ முதல் சண்டைஎல்லாப்போர்முகத்திலும் நின்றுபோய்விட்டதென்பது நமது நேயர்கள் அறிந்தவிஷயமே. அடுத்த வருஷ ஆரம்பத்தில் சமாதானத்தைப்பேசுவதற்காக சகல தேசங்களின் பிரதிநிதிகளுமடங்கியகாங்கிரஸ் பிரான்ஸ் தேசத்திலே வெர்சைல்ஸ் என்ற இடத்தில் ஆரம்பமாகுமென்றும் அதில் பிரிட்டிஷ்சார்பில் கவர்ன்மெண்டு பிரதிநிதிகளும், துவிபாஷிகளும், நிபுணர்களுமாகச்சமார் 200 பெயர்களுக்கதிகமாக விஜயமாயிருப்பார்களென்றும் சொல்லப்படுகிறது.



ஜெர்மன்சக்ரவர்த்தி கெய்ஸர் பட்டத்தினின்று விலகி ஹாலந்துதேசத்தில் தற்சமயம் தாமதித்திருப்பது நேயர்கள் அறிந்தவிஷயமே. ஜெர்மன்சக்ரவர்த்தினியும் கெய்ஸரின்புதல்வர்களும் ஜெர்மனியிலே பாட்ஸ்டாம் என்ற இடத்திலுள்ள அரண்மனையிலேயே இன்னமும் வாசஞ்செய்துகொண்டு வருகின்றார்களென்றும், தொழிற்கட்சி அதிகாரிகள் அவர்களைப்பாதுகாத்து வருகின்றார்களென்றும், சொல்லப்படுகின்றது. இன்னும் அநேக அரசர்கள் பட்டத்தினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்தயுத்தத்திம் நமது நேசதேசங்கள் அடைந்தவெற்றியைக் குறித்து எல்லாஇடங்களிலும் மிகுந்தஆரவாரத்துடன் கொண்டாடினார்கள். இப்போதுஏற்படப்போகும் சமாதானமானது எப்போதும் நிலைநிற்கும்படியாய் கடவுள் அருள்புரிவாராக.

## சிவகாமிசுந்தரி.

ஓர் நவீன தமிழ்க்கதை.

### பேயின் சேஷ்டைகள்.

(192-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

லோசனன் வேண்டிக் கொண்ட வாறு சோபாவின் மீதுட்கார்ந்த வைத்தியர் அவனை நோக்கி "வெளியிருந்து எப்போது வந்தாய்" என வினவினர்.

"சுமார் அரைமணி நேரத்திற்கு முன்பு தான் வந்தேன். என் சிற்றி திடீரென இறந்ததைப் பற்றி நினைக்க நினைக்க எனக்கு—என்றனன் லோசனன்

அவன் பேசி முடிப்பதற்குள் வைத்தியர் "விடு விடு! என்னவோ பிரமன் எழுதினபடி நடந்து விட்டது. இதற்காக ஏன் உன் மனத்தை வீணாகப் புண் படுத்திக் கொண்டிருக்கிறாய்? ஆனால் உனக்கு அதனால் ஓர் பழி கிழி வராமல் தப்பித்துக் கொண்டாயே. அதுவரையில் எனக்கு சந்தோஷம்" என்றனர்.

"ஆமாம் நீங்கள் அவ்விஷயமாய்ச் செய்த உதவி ஒருநாளும் மறக்கத்தக்கதல்ல"

"நம்மாலே என்ன ஆகும் நாயினா! எல்லாம் பகவான் சித்தம், அவன் சித்தமில்லா விட்டால் நான்தான் என்ன செய்வேன் நீ தான் என்ன செய்வாய்? என்ன! நான் சொல்வது? ஹூஸ்தவன் தானே?"

"ஆமாம்" எனச் சொல்லி தலையை யசைத்துவிட்டுச் சிறிது நேரத்திற்குப் பிறகு. "இன்னொரு விஷயத்தைப் பற்றிய கவலை என்னை வருத்துகிறது" என்றனன் லோசனன்.

"என்ன விஷயத்தைப்பற்றி?" என வினவினர் வைத்தியர்.

"சிற்றி இறந்ததற்கு ஊராருக்கு என்ன காரணம் சொல்வது" என்ற விஷயத்தைப் பற்றித்தான்

"இந்த அற்ப விஷயத்துக்குத் தானா நீ கவலைப்படுகிறாய் அந்த விஷயத்தைப்பற்றி நான் முன்னமே யோசித்து வைத்திருக்கிறேன், உன் சிற்றி மரணமடைந்த விஷயத்தைநான் தபால் மார்க்கமாய் ஏன் தெரிவிக்கவில்லை தெரியுமோ? கடிதாசி எழுதித் தபாலிலே போட்டால், அந்தக்கடிதாசி தவறி யார் கையிலாவது அகப்பட்டுவிட்டால் ரகஸ்யம் வெளியாய்விடுமென் றெண்ணி ஒரு ஆள் மூலமாய் உனக்குக் கடிதாசி அனுப்பினேன்; மேலும் அந்தக் கடிதாசியில் "மரணமடைந்தாள்" என்றெழுதினேனொழிய மரணமடைந்த பேர்வழியைக் குறிப்பிட்டு எழுதவில்லை ஆள்மூலமாய் அனுப்பின அந்தக் கடிதாசியுங்கூட ஒரு வேளை தவறிவிட்ட போதிலும் மரணமடைந்த பேர்வழி உன் சிற்றி என்று ஒருவருக்கும் தெரியாதிருப்பதற்காக அந்த யுக்தி செய்தேன். பகவானுடைய கிருபையினாலே அந்தக் கடிதாசி எவ்வி[illegible]யுந் தவறாமல் உன் கையிற் சேர்ந்துவிட்டது. இனி என்ன செய்ய வேண்டுமென்றால் நேற்றுக் காலையில் உன் சிற்றி சந்திரபுரிக்குப் போனதாகவும் அங்கே திடீரென மாரடைத்து செத்துவிட்டதாகவும் ஒரு கதை கட்டிவிடுவோம்."

"அப்படிச் சொல்வது பெரிய அபத்தமல்லவா!" எனத் திகைத்துக் கூறினான் சுந்தரலோசனன்.

"என்ன நாயினே! காலம் கலிகாலமல்லவா! எல்லாம் முன்னே பின்னே ஏறக்குறையப் பார்த்துத்தான் நாமுடைய காரியத்தை நடத்திக்கொள்ள வேண்டும். இந்தக் கலிகாலத்தில் அரிச்சந்திரனைப்போல இருக்கமுடியுமோ? ... பகவான் சித்தம் அவனன்றி அணுவும் அசையாது, என்ன! நான் சொல்வது வாஸ்தவந் தானே?"

(தொடரும்)

சு. அ. சுப்பையபிள்ளை, தூத்துக்குடி.

21070